வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 15

எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு

[MGR Science Fiction Films]

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்

3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,

தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 15

எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு

[MGR Science Fiction Films]

முனைவர் செ. இராஜேஸ்வரி M. A., M. Phil., Ph. D.,

சந்திரோதயம் பதிப்பகம்

3/472 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,

தினமணி நகர், மதுரை – 625 018, Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 15
நூலின் பெயர்	:	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு [MGR Science Fiction Films]
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
அட்டை வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை, தினமணி நகர், மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	முதல் (செப்டம்பர் 2019)
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	103
விலை	:	Rs.200/-

\- - - - -

Book	:	*Vetrithirumagan MGR – 15*
Title	:	*MGR Science Fiction Films*
Author	:	*Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,*
Cover Design	:	*C. Meenatchi*
Publisher	:	*Chandrothayam Pathippagam* *3/472 First floor, Kambar 2nd Street* *Kambar Salai, Dinamani Nagar* *Madurai – 625 018* *Phone : 7010997639*
Month of Publish	:	*September 2019*
Pages	:	*103*
Price	:	*Rs.200/-*

அன்புக் காணிக்கை




கடல் ஆய்வு, வானவியல் ஆய்வு மற்றும்
உலகம் சுற்றி வர எம்.ஜி.ஆர். நடித்த ஆயிரத்தில்
ஒருவன், கலையரசி, மற்றும் உலகம் சுற்றும்
வாலிபன் தனக்கு inspiration ஆக இருந்தன
என்று கூறும் சமூக அறிவியலறிஞர்
ஒரிசா பாலு அவர்களுக்கு இந் நூல்
அன்புக் காணிக்கை.





இந்நூலை 2019, நவம்பர் மாதம் மலேசிய
எம்.ஜி.ஆர் பேரவைக் கூட்டத்தில்
வெளியிட்டுதவிய ***அண்ணல் சைதையார்***
அவர்களின் திருப்பாதங்களில் நன்றி
மலர்களை சமர்ப்பிக்கிறோம்!




from TO-DAY
JUPITER'S
Marmayogi
A
at
MADRAS PRABHAT · CHITRA · RAJAKUMARI
EK THA RAJA
STORY & DIALOGUE
A.S.A. SAMY
DIRECTION
K. RAMNOTH
STUDIO · CENTRAL

நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். மொழிபெயர்ப்பியல் ஆய்வு என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைகழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். **Indian Women– Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles** போன்ற பல துறை சார்ந்த பனுவல்களை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் *[Associate editor]* பணயாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று

பாகங்களாக வெளி வந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளி நாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க Tamil for Non-Tamils என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க Easy English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார்.

மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [Centre for Language Studies] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களைத் தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிந்துகொள்வதில் அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் இரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை முனைவர் சாரா திக்கி என்பவரும் ஆராய்ச்சி செய்தனர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர். பற்றி ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100 என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார்.. எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது

1. ***வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்,***

2. ***எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,***

3. ***சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்),***

4. ***வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட,***

5. ***மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.,***

6. ***எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி,***

7. ***எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி,***

8. ***ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,***

9. ***வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I,***

10. ***நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I],***

11. ***பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II],***

12. **இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.,**

13. **முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்**

14. **இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.**

15. ***எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு [MGR Science Fiction Films]*** *என்ற இந்நூல் வெளிவந்துள்ளது.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி மற்றும் திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற கவிதை நூல்களை இவர் "Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You Language of Love, and A Lady at the little gate", என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் பூ மர நிழலில் களமும் காலமும் மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும் பாசப்பொருளும் [திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்] ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

சென்னை பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி

வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள் ‘அமராவதியின் காதல்’ என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய “என்னோட ராசி நல்ல ராசி” என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் ‘மர வழிபாட்டின் வேர்களைத் தேடி *(Deep into the roots of Tree worshit)*, காளியும் தேவியும், உலகளாவிய காளி கோட்பாடு’ போன்ற ஆன்மீகக் கட்டுரைகள் வெளிவருகின்றன.

உள்ளடக்கம்



1. அணு சக்தி விஞ்ஞானம் பற்றிய உலகம் சுற்றும் வாலிபன்

எம்.ஜி.ஆர். நடித்த படங்களில் கலையரசி, ஆசை முகம், உலகம் சுற்றும் வாலிபன் ஆகிய படங்களில் கதைக்களம் அறிவியல் புனைவு சார்ந்ததாகும். இவற்றில் உலகம் சுற்றும் வாலிபன் அணு சக்தி அறிவியல் பற்றியதாகும். மின்னலில் இருந்து எடுத்த ஆற்றலில் லட்சத்தில் ஒரு பங்கை ஒரு சிறிய மாத்திரை வடிவில் சேமித்து வைத்தால் அதைக் கொண்டு பெரும் காட்டையே எரிக்கலாம் என்ற அறிவியல் கண்டுபிடிப்பு கதையின் கருப்பொருளாக அமைந்துள்ளது.

அணு சக்தி குறித்த கண்டுபிடிப்பைத் தன்னிடம் விற்கும்படி படத்தில் வில்லனாக வரும் அசோகன் அணு விஞ்ஞானியான முருகனிடம் [அண்ணன் எம்.ஜி.ஆர்.] வந்து கோடிக்கணக்கான டாலர் தருவதாக ஆசை வார்த்தைகளைக் கூறுகிறான். எம்.ஜி.ஆர். மறுத்துவிடுகிறார். இவ்வாறு படம் தொடங்குகிறது. தனது ஆராய்ச்சிக் குறிப்பை எம்.ஜி.ஆர். எரித்து விட்டதாக மற்ற விஞ்ஞானிகளை நம்ப வைத்து விட்டு உண்மையான குறிப்பு இருக்குமிடத்தை பற்றிய ரகசியத்தை மூன்று



பங்காகப் பிரித்து டாலர், கடிகாரம், புத்தர் சிலை என மூன்று பொருள்களில் மறைத்துவைத்து வெவ்வேறு நாடுகளில் தனது நண்பரிடம் ஒப்படைத்து விடுகிறார். ஆராய்ச்சி குறிப்பு ஜப்பானில் உள்ள ஒரு புத்தர் கோயிலில் தரைக்குள் புதைத்து வைக்கப் பட்டிருக்கிறது. இது ஓர் அறிவியல் புனைவு படம் ஆகும்.

வில்லன் அசோகன் விஞ்ஞானி முருகனிடமிருந்து [அண்ணன் எம்.ஜி.ஆர்.] ஆராய்ச்சிக் குறிப்பு பற்றிய உண்மையை வரவழைக்க எதிரிகள் முயற்சி செய்யும்போது தன் அண்ணன் முருகனை காப்பாற்றவும் வில்லனிடம் ஆராய்ச்சிக் குறிப்புகள் கிடைத்து விடக் கூடாது என்பதற்காகவும் சர்வதேசக் காவல் துறையைச் சேர்ந்த ராஜூ [தம்பி எம்.ஜி.ஆர்.] வருகின்றார். அண்ணன் எம்.ஜி.ஆருக்கு பிரெஞ்ச் தாடி எனப்படும் குறுந்தாடி வைத்து வித்தியாசம் காட்டப்பட்டிருக்கும். போலீஸ் துறையைச் சேர்ந்த தம்பி எம்.ஜி.ஆருக்கு தாடி இருக்காது.



படம் தொடங்கும் போது எம்.ஜி.ஆர். ஆராய்ச்சி செய்வதும் மின்னலில் இருந்து சக்தியை சேகரிப்பதும் குறிப்புகளை எழுதுவதுமாக ஒரு பரிசோதனைச் சாலையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பார். ஆராய்ச்சி குறிப்பை அவரிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்பதற்காக அனுப்பப்பட்ட அவரது செயலர் லதா ஒளிந்து ஒளிந்து அவருடைய நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டு இருப்பார். ஆனால் அவரால் எதையும் கண்டுபிடிக்க இயலாது. எழுதி முடித்ததும் சக்சஸ் சக்சஸ் என்று சொல்லி மகிழ்கிறார்.

விஞ்ஞானிகள் கூட்டத்தில் விவாதிக்கப்படும் அணு ஆயுதத்தின் அழிவு பற்றிய கருத்தை உள்ளடக்கிய கதையம்சம் உள்ள படமாக உலகம் சுற்றும் வாலிபன் படம் அமைந்தது. இது அணு ஆயுதத்தால் சர்வதேச அழிவு மற்றும் பாதுகாப்பு குறித்த அக்கறை கொண்ட படமாகும். ஒரு நொடி மின்னலில் இருந்து எடுத்த ஆற்றலைச் சேமித்து வைத்து மிகப்பெரிய ஆக்க சக்தியாக உருவாக்க



வேண்டும் என்ற நோக்கத்தை விஞ்ஞானிகளின் கூட்டத்தில் எம்.ஜி.ஆர். வெளியிடுவது அவரது உலக சமாதானம் பற்றிய அக்கறையை உறுதி செய்கிறது.

சர்வதேச விஞ்ஞானியின் கதை

உலகம் சுற்றும் வாலிபன் சர்வதேசத் தமிழ் விஞ்ஞானி ஒருவரைப் பற்றிய கதை இப்படத்தின் எந்த நிகழ்வும் தமிழ்நாட்டில் நடைபெறவில்லை. இக்கதையில் அண்ணன் தம்பி எம்.ஜி.ஆர்., அவர்களின் ஜோடியான மஞ்சுளா, சந்திரகலா, செயலர் லதா, நண்பர் நாகேஷ், மற்றும் வில்லன்கள் மட்டுமே உண்டு.

ஹாங்காங்கில் தொடங்கும் இக்கதை அங்கு வாழும் ஒரு தமிழ் விஞ்ஞானியைப் பற்றிய கதையாகும். இதுவும் அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்துவிட்ட இக்காலத்தில் சர்வதேசக் குடிமகன் என்ற பெயரில் சிலர் [குளோபல் பாஸ்போர்ட்] சர்வதேச கடவுச் சீட்டு பெற்றுள்ளனர். உலகம் சுற்றும் வாலிபன் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட கதையாகும். அப்போது ஒரு விஞ்ஞானி உலகுக்கு சொந்தமானவன்; அவனுக்கு நாடு, மொழி, இன, மத, பேதம் கிடையாது.

உலகில் வாழும் மனிதர்களை அழிவிலிருந்து காப்பாற்றும், உன்னத நோக்கத்துடன் சர்வதேசக் காவலதிகாரியான ராஜூ அழிவு சக்தியைத் தேடிக் கொண்டிருக்கும், தீயவர்களிடம் அந்த ஆராய்ச்சிக் குறிப்புகள் கிடைத்துவிடக் கூடாது என்று பாடுபடுவார்.

அறிவியலின் ஆற்றல் பற்றிய விளக்கம்

உலகம் சுற்றும் வாலிபன் கதையில் விஞ்ஞானியும் சர்வதேசக் காவலதிகாரியும் என இருவருமே உலக மக்களின் நன்மைக்காக பாடுபடுகின்றனர். இக்கதை சர்வதேச அமைதிக்காக உழைக்கும் இரு சகோதரர்களை பற்றிய கதையாக அமைந்திருக்கும்.

அறிவியலின் சக்தி பற்றி படத்தின் தொடக்கத்தில் ஒரு விளக்கம் வழங்கப்படும். இவ்வுரையின் பின்னணியில்; மூத்த தலைவர்கள் பலர் திரையில் காட்டப்படுவர். இவ்வுரையை எம்.ஜி.ஆரின் அண்ணன் சக்கரபாணி நிகழ்த்துவார்.

“விஞ்ஞானம், மனித இனத்தின் புகழைக் கூண்டு கட்டி சந்திரனுக்கு கொண்டு செல்லவும் அதனால் முடியும் மனித இனத்தைக் கூண்டோடு அழிவுப் பாதைக்கு அனுப்பவும் அதனால் முடியும். அறிவுக் கண்கள் இயற்கை நுணுக்கங்களை எடுக்கும் போது இதயக் கண்கள் பழுதாகி விடக்கூடாது. பழுதான காரணத்தினால்தான் ஹீரோசீமா உருவாகியது. மகாத்மா காந்தி, பண்டிதர் நேரு, பெட்ரான்ட் ரஸ்ஸல் லால்பகதூர் சாஸ்திரி, மூதறிஞர் இராஜாஜி, நமது தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா போன்ற உலகத் தலைவர்கள்



எல்லோருமே விஞ்ஞான முறையில் புதுயுகம் காண முயன்றார்கள்''.

அண்ணா சொன்னார்,

[அண்ணாவின் உரையின் பின்னணியில் எம்.ஜி.ஆர். தன் ஆராய்ச்சிக் குறிப்பை பாதுகாக்கும் காட்சிகள் காட்டப்படும்].

''விஞ்ஞானம் கட்டுக்கடங்காது நெறிகலைந்து போகும்போது பகுத்தறிவு அதனை பக்குவப்படுத்திடவும், பயனுள்ளதாக்கிடவும் வேண்டும். ஏழ்மை தொலைந்தது, இல்லாமை மறைந்தது, வளம் கொழித்தது, வாழ்வு செழித்தது. இனி எல்லார்க்கும் எல்லாம் என்று மகிழத்தக்க நிலையை உருவாக்குவதே விஞ்ஞானத்தின் இலட்சியமாகும். விஞ்ஞானம், அது மண்ணுலக சொர்க்கத்தின் திறவுகோல். அதுவே நரகத்தின் அளவுகோலாகி விடக்கூடாது''.

இவ்வுரை முடிந்ததும் பெயர்ப் பட்டியல் காட்டப்படும். அதன் பின்னணியில் அறிவியலின் சிறப்பு, உலக சமநீதி, அரசியல் வெற்றி

ஆகியவற்றைப் பற்றிய பாடல் [TITLE SONG] சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் ஒலிக்கும்.

“நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்,
இப்படை தோற்கின் எப்படை வெல்லும்,
நீதிக்கு இது ஒரு போராட்டம்,
இதை நிச்சயம் உலகம் பாராட்டும்.
வல்லோர்கள் சுரண்டும் பொல்லாத கொடுமை,
இல்லாமல் மாறும் பொருள் தேடி,
அன்று இல்லாமை நீங்கி எல்லோரும் வாழ,
இந்நாட்டில் மலரும் சமநீதி.
நம்மை ஏய்ப்பவர் கையில் அதிகாரம் ,
இருந்திடும் என்னும் கதை மாறும்,

ஆற்றலும் அறிவும் நன்மைகள் ஓங்க,
இயற்கை தந்த பரிசாகும்,
இதில் நாட்டினைக்கெடுத்து நன்மைகள் அழிக்க,
நினைத்தால் எவர்க்கும் அழிவாகும்.
நல்லதை வளர்ப்பது அறிவாற்றல்,
அல்லதை நினைப்பது அழிவாற்றல்

நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்,
இப்படை தோற்கின் எப்படை வெல்லும்,
நீதிக்கு இது ஒரு போராட்டம்,
இதை நிச்சயம் உலகம் பாராட்டும்”.



இப்பாடலின் கருத்து சர்வதேச மனித சமுதாயத்தின் அமைதியை வலியுறுத்துவதாக அமைந்தது. இவ்வாறு தொடக்கத்திலேயே கதைக்களம், காட்சிகள், வசனம், பாடல் என அனைத்திலும் அறிவியல் கருத்து தென்பட்ட படங்களில் முக்கியமானது உலகம் சுற்றும் வாலிபன்.

விஞ்ஞானி முருகனின் கதாபாத்திரப் படைப்பு பணத்துக்கு ஆசைப்படாத பண்பாளராக, மனித சமுதாயத்தின் அமைதியை நாடுபவராக உருவாக்கப்பட்டிருந்தது. இவரது உயரிய பண்பை உணர்த்தும் காட்சி வருமாறு.

முருகன் : உலகத்தின் தலைசிறந்த விஞ்ஞானிகளே, அறிவுலக மேதைகளே, நான்கு ஆண்டுகளுக்கு முன் இப்படிப்பட்ட ஒரு விஞ்ஞானிகள் மகாநாட்டில் மின்னலை மனிதன் ஆக்க சக்திக்கு பயன்படுத்த முடியுமா? என்ற கேள்வி எழுந்தது. முடியும் என்று நான் சென்னேன். பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தீர்கள். முயன்றேன், வெற்றியும் பெற்றேன். ஆனால் அது ஒரு மாபெரும் அழிவு சக்தியாக உருப்பெற்றுவிட்டது.

பைரவன் : மிஸ்டர் முருகன் நீங்கள் சொல்றது எங்களுக்கு புரியலயே .. . .

முருகன் : ஒரே ஒரு முறை தோன்றும் மின்னலை சேமித்து வைத்தாலே, அது பல அணுகுண்டுகளின் சக்தியை பெற்றுவிடுகிறது. அதிக அளவில் சேமித்து வைத்து வெளியிட்டால் அது இந்த உலகத்தை ஒரே ஒரு நொடியில் சாம்பளாக்கிவிடும்.

வெளிநாட்டவர் : *Is it true?*

வெளிநாட்டவர் : *Is it possible?*

வெளிநாட்டவர் : *It is world break achievement.*

பைரவன் : *Mr. Murugan you are great great,* நீங்கள் மனித சக்தியின் ஏக பிரதிநிதி, இயற்கையை எதிர்த்து போராடும் மகா மேதை. நீங்கள் கண்டுபிடிச்ச இந்த ஆராய்ச்சியை இந்த அறிவுச்சபைக்கு முன்னால எடுத்துச் சொல்லுங்க, பிறகு அகிலத்துக்கே சொல்லுங்க.

வெளிநாட்டவர் : *Yes Mr.Murugan please wait of your result.*

முருகன் : *I am very sorry sir* என்னை மன்னிச்சிருங்க, நான் அதை வெளியிட விரும்பல.

வெளிநாட்டவர் : *Why sir,*

வெளிநாட்டவர் : *What is the matter?*

பைரவன் : ஏன்?

முருகன்: இந்த உலகத்தையே சுடுகாடாக்கும் மூன்றாவது உலக யுத்தம் எங்கு தோன்றுமோ எப்படி

வெடிக்குமோ என்று மனித குலமே அஞ்சி அஞ்சி நடுங்கிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் மேலும் ஒரு அழிவு சக்தி தேவையா?

பைரவன் : நல்ல கற்பனை . . . ம் . . நான் நெனெச்சேன்

முருகன் : என்ன நெனெச்சீங்க

பைரவன் : புகழ் அடையிறதுக்கு இது ஒரு புது வழி. கண்டு பிடிச்சுட்டதா சொல்லி கைத்தட்டல் வாங்குறது. பிறகு வெளியிடாம இருக்கிறதுக்காக வேதாந்தம் பேசுறது. மிஸ்டர் முருகன் எனக்கு வெட்கமா இருக்கு.

முருகன்: அப்போ நான் சொல்றத நீங்க நம்பலயா?

பைரவன் : என்னால நம்ப முடியல மிஸ்டர் முருகன்.

முருகன் : சகோதர விஞ்ஞானிகளே நான் சொல்றதுதா உண்மை.

வெளிநாட்டவர் : But don't believe it.

வெளிநாட்டவர் : It is fantastic.

முருகன் : தயவு செய்து நான் சொல்றத நம்புங்க.

வெளிநாட்டவர் : Demo and prove it.

பைரவன் : நிரூபிச்சுக் காட்டுங்க.

வெளிநாட்டவர் : Yes demonstrate it.

முருகன் : ஓஹோ! ஓகே. நிரூபிச்சு காட்டுறேன் . . . வாங்க.

(அனைவரும் ஒரு பரந்த வெற்றிடத்திற்கு வருதல்)

பைரவன் : மிஸ்டர் முருகன் இங்க ஏன் அழைச்சிட்டு வந்தீங்க?

முருகன் : கொஞ்சம் பொறுங்க (தான் கண்டுபிடித்த அணு குண்டை காண்பிப்பார்)

வெளிநாட்டவர் : What is this Mr.Murugan?

பைரவன் : என்ன இது?

முருகன் : கண் இமைக்கும் நேரத்தில் தோன்றி மறையும் மின்னலின் சக்திகளை பத்து இலட்சத்தில ஒரு பங்கை இதுல சேமித்து வைத்திருக்கேன்.

பைரவன் : இதால என்ன செய்ய முடியும்?

முருகன் : நீங்க பாக்குறீங்களே இவ்வளவு பெரிய இடம், இது அத்தனையையும் ஒரு நொடியிலேயே சாம்பலாக்கிடும்.

பைரவன் : இவ்வளவு பெரிய இடத்தையா?

முருகன் : "ஆமா . . . (என்று கூறிவிட்டு அந்த குண்டை தன் செக்ரட்ரி லில்லி (லதா) கொண்டு வந்திருக்கும் துப்பாக்கியில் போட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தை காட்டி) அதோ பார் மத்தியில ஒரு சின்ன மரம் தெரியுதுல அதத்தான் சுடனும்" என்றவுடன் லதா சுடுவார். உடனே அந்த இடம் முழுவதும் தீப்பற்றி எரியும். அனைவரும் அதிர்ச்சியில் பயந்து ஒதுங்குவர். அதேப்போல் பயந்து ஒதுங்கும் லில்லியிடம் முருகன், லில்லி பயப்படாத இந்த தீயை அனைக்கிறதுக்கான ஏற்பாடெல்லாம் செய்து வச்சிருக்கேன்.

அனைவரும் அவரைப் பாராட்டுவர். அப்போது அந்த ஆராய்ச்சி குறிப்புகளை எறித்துவிடுவார். அனைவரும் அதிர்ச்சியில் ஏன் என கேட்கும்போது, நான் கண்டுபிடித்தேனே அந்த ஆராய்ச்சி குறிப்புதான் இது, இனிமேல் இது யாருக்கும் பயன்படாது என கூறுவார்.

வெளிநாட்டவர் : *Mr. Murugan at last you did a foolish thing.*

வெளிநாட்டவர் : *Are you mad?*

வெளிநாட்டவர் : *All your energy wasted.*

பைரவன் : மிஸ்டர் முருகன் *Congratulation.* நீங்க எரிச்சீங்களே ஆராய்ச்சி குறிப்பு, அத நான் நம்பல.

முருகன் : நீங்க எப்ப என்னை நம்புனீங்க? இப்ப நம்புறதுக்கு.

பைரவன் : மிஸ்டர் முருகன் உலகத்திலேயே நீங்கள் பெரிய விஞ்ஞானினு நிரூபிச்சிட்டீங்க. இப்ப நான் உங்கள உலகத்திலேயே பெரிய பணக்காரன்னு நிரூபிக்க போறேன்.

முருகன் ஆச்சரியத்துடன் பார்த்தவுடன்,

பைரவன் : யெஸ், உங்க ஆராய்ச்சி குறிப்ப எந்த வெளிநாட்டுக்காவது வித்தா . . .

முருகன் : ம்.. எதிரி நாடு தீப்பற்றி எறியும், பலகோடி மக்கள் அழிவாங்க.

பைரவன் : அதப்பத்தி நமக்கென்ன கவல. நமக்கு வேண்டியது பணம். ம் . . . சரின்னு சொல்லுங்க இப்பவே . . . இப்பவே ஒரு கோடி டாலர் தர்றேன்.

முருகன் : ஒரு கோடி டாலர்? மிஸ்டர் பைரவன் உங்கள ஒரு விஞ்ஞானினு தான் நெனெச்சிட்டு இருந்தேன். நீங்க ஒரு வியாபாரினு இப்பதான் புரிஞ்சிக்கிட்டேன்.

பைரவன் : 5 கோடி தர்றேன்

முருகன் : 5 கோடி பேஷ் ! நீங்க சாதாரண வியாபாரி இல்ல சந்தையில ஏல போடுற வியாபாரி.

பைரவன் : 10 கோடி தர்றேன்

முருகன் : 10 கோடி டாலர் சிரித்துக் கொண்டே மிஸ்டர் பைரவன் உங்களுக்கு 10 கோடி டாலர் பெரிசு, இந்த உலகத்தில உள்ள தனி ஜீவன் எனக்கு அதவிட பெரிசு. மிஸ்டர் பைரவன் மக்களுடைய அழிவுல நீங்க வாழ்ந்துறலானு நம்பாதிங்க. இந்த



பணமே உங்கள அழிச்சுரும், அது நிலைக்கவும் நிலைக்காது.

பைரவன் : மிஸ்டர் முருகன் . . .

முருகன் : கோபத்தில் - மிஸ்டர் என் ஆராய்ச்சிக்கு மனித பலி கொடுக்க நான் தயாராயில்ல குட் பை. பிறகு, லில்லியை அழைத்து, லில்லி எனக்கு உதவியா எவ்வளவோ சிரமப்பட்டிருக்க ரொம்ப தாங்க்ஸ். நான் ரெஸ்ட் எடுத்துக்க போறேன். நீ ஊருக்கு போ. நான் திரும்ப வந்து லெட்டர் போடுறேன். சிங்கப்பூர்லயே இரு. செலவுக்கு இந்த 2,000 டாலர் வச்சிக்க. பை பை.

நிறைவு

தமிழ்த் திரைப்படங்களில் எம்.ஜி.ஆர். நடித்து இயக்கி தயாரித்து வெளிவந்த உலகம் சுற்றும் வாலிபன் படம் வசூலில் சாதனை படைத்தது. இன்று இப்படத்தை மறு ஆக்கம் செய்ய பலர் விரும்புகின்றனர். ஏனென்றால் இக்கதை உலக அமைதி அணு சக்தி போன்ற தற்கால அறிவியல் கண்டுபிடிப்புகள் சார்ந்த அறிவியல் புனைவு கதை ஆகும். ஹாலிவுட் இன்று அறிவியல் புனைவு கதைகளை ஏராளமாக எடுக்கத் தொடங்கிவிட்டன. இவற்றிற்கு நிகராக தமிழ் திரையுலகும் தமிழில் படங்களை எடுக்க ஆவலாக உள்ளது. இன்றைக்கு இங்கு உருவாகியிருக்கும் ஆவலும் தேட்டமும் 1970இல் எம்.ஜி.ஆருக்கு உருவாகிவிட்டதால் அவர் உலகளாவிய பிரச்சனை ஒன்றை மையமாக வைத்து உலகம் சுற்றும் வாலிபன் படத்தை எடுத்தார்.

2. கலையரசி படத்தில் அறிவியல் தொழிநுட்பம்

திராவிட இயக்கத்தைச் சேர்ந்த எம்.ஜி.ஆர். சமயம் என்ற பெயரில் பின்பற்றப்பட்டு வந்த மூடப்பழக்க வழக்கங்களை தன படங்களில் எதிர்த்தார். மக்களுக்கு பகுத்தறிவு வளர வேண்டும் என்பதற்காக தன்னுடைய படங்களில் அறிவியல் தொடர்பான விஷயங்களைப் புகுத்தினார். ரஷ்யா ஸ்புட்னிக் என்ற விண்கலத்தை ஏவி வந்த சூழ்நிலையில் எம்.ஜி.ஆர். alien என்று இன்று அழைக்கப்படும் வேற்றுக்கிரகவாசியைப் பற்றிய படம் ஒன்றில் நடிக்க மூடிவு செய்தார். ஜேம்ஸ் கேமரூன் இயக்கிய Aliens, Avengers வரிசை படங்கள்;, வில் ஸ்மித் நடித்த Men in black, அவதார் போன்ற வெற்றி படங்கள் வேற்றுக்கிரகவாசிகளைப் பற்றியனவாகும்.

கலையரசி என்று பெயரிடப்பட்ட அறிவியல் புனைவுப் [science fiction] படம் வேற்று மண்டலத்தைச் சேர்ந்த ஒருவர் பூமிக்கு வந்து இங்கிருந்த கலைவாணியை அங்கே அழைத்துச் சென்று அங்குள்ள இளவரசிக்குப் பாட்டு சொல்லிக்கொடுக்கும் படம் ஆகும். இந்தியத் திரையுலகில் தமிழில் முதன்முதலாக ‘ஏலியன்’

என்று சொல்லப்படும் வேற்றுக் கிரக வாசியைப் பற்றிய படம் எம்.ஜி.ஆர். நடித்த கலையரசி ஆகும்.

கலையரசி படத்தில் வேற்றுக் கிரகத்திற்குச் செல்லப் பயன்படுத்தப்பட்ட விண்கலம் அதற்குள் இருக்கும் மின் கருவிகள் வேற்றுக்கிரக வாசிகளுக்குரிய விசேஷ உடை, முகமூடி, விண்கலத்தில் இருந்த படியே தொலை தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்தி பூமியில் நடக்கும் நிகழ்சிகளைப் பார்த்து மகிழ்தல், அங்குப் புவியிர்ப்பு சக்தி இல்லாத நிலை அங்கு அவர்கள் நடமாடுவதற்கு பயன்படுத்திய விசேஷ செருப்புகள் என்று பல அறிவியல் சார்ந்த விஷயங்கள் இப்படத்தில் இடம்பெற்றிருந்தன.



கதைச்சுருக்கம்

ஒரு பறக்கும் தட்டு பூமியை நோக்கி வருகிறது. 'பூ மண்டலத்தை நெருங்கிவிட்டோம். வேகத்தை குறைத்துக் கொள்' என்று தன் நண்பனிடம் வான மண்டலத்தைச் சேர்ந்த திண்ணன் கூறவும் வேகத்தை குறைத்து அந்தப் பறக்கும் தட்டை அவன் பூமியில் இறக்குகிறான். திண்ணனாக நடித்திருப்பவர் நம்பியார். அவர் இங்கு இசையில் சிறந்து விளங்கும் பானுமதியை கடத்திக்கொண்டு வேற்றுக்கிரகத்திற்குச் செல்கிறார். வேற்று கிரகம் என்று இன்றைக்கு நாம் பயன்படுத்தும் சொல்லை இப்படத்தில் வான மண்டலம் என்று குறிப்பிடுகின்றனர். அங்குள்ள இளவரசி ராஜ ஸ்ரீக்கு பானுமதி இசைப்பாடல் கற்றுத் தருகிறார். அங்குப் போய் எம்.ஜி.ஆர். பானுமதியை மீட்டுக்கொண்டு வருகிறார்.

வேற்றுக் கிரகத்தில் வசிக்கும் கோமாளி எனப்படும் ஒரு கதாபாத்திரத்தையும் எம்.ஜி.ஆர்.



ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால் இந்தக் கோமாளி எரி நட்சத்திரம் தாக்கியதால் சில நிமிடங்களில் உயிர் இழந்துவிடுவான். அவனது உடையைத் தான் அணிந்துகொண்டு அந்த வான மண்டலத்தில் கோமாளியாக பூமியில் இருந்து சென்ற எம்.ஜி.ஆர். பானுமதியைத் திருப்பி கொண்டு வரும் முயற்சிகளில் ஈடுபடுவார். அவர் அங்கிருந்து பானுமதியை மீட்டுக் கொண்டு வருவதற்கு உதவியாக இருப்பவர் இளவரசி ராஜஸ்ரீ. எம்.ஜி.ஆர். இளவரசியைக் காதலிப்பதாக நடித்து பறக்கும் தட்டு இயக்கும் முறைகளை கற்றுக்கொள்வார். பின்பு இளவரசியிடம் உண்மையைக் கூறிவிட்டு அவரது சம்மதம் மற்றும் வழி அனுப்புதலுடன் பானுமதியை மீட்டுக் கொண்டு இப்படத்தில் பல அறிவியல் தொழில்நுட்ப காட்சிகள் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.




பறக்கும் தட்டு

கலையரசி படத்தில் விண்கலத்தை பறக்கும் தட்டு என்று குறிப்பிடுவர். வானத்தில் பறக்கும் பறக்கும் தட்டைப் பார்க்கும் கிராமவாசிகள் அது என்ன என்று கேட்க எம்.ஜி.ஆர். 'இது பறக்கும் தட்டு நம்மள மாதிரி வேறு மண்டலத்தில் ஆட்கள் இருக்காங்க. அவங்க ஓட்டிகிட்டு வர்றதா ஆராய்ச்சியாளர்கள் சொல்றாங்க' என்று விளக்கம் அளிப்பார். இக்காட்சி படம் பார்ப்பவர்களுக்கு பறக்கும் தட்டையும் வேறு மண்டலங்களிலும் மனிதர்களைப் போன்றோர் வாழ்கின்றனர் என்ற தகவலையும் கதைக் களத்தையும் புரிய வைக்கிறது.

படம் முடியும் போதும் 'இப்போது உங்களுக்கு இதெல்லாம் ஆச்சரியமாக இருக்கும். ஆனால் ஒருநாள் மனிதன் சந்திர மண்டலத்திற்கு போய் வருவது உறுதி' என்று 1964-ல் வெளிவந்த இந்த படம் கூறிய தகவல் 1967இல் உண்மையாகிவிட்டது.

அக்னி அஸ்திரம்

வேற்றுக்கிரகவாசியான திண்ணன் பூமியை இரங்கி இங்குள்ள காட்டுக்குள் நடந்து வருகிறான்.



அப்போது அவன் எதிரே ஒரு கரடி வருகிறது. அந்தக் கரடியிடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக அதன் மீது ஒரு அக்னி ஏவுகணையை திண்ணன் வீசுகிறான். அது தீப்பொறி பறக்க கரடி மீது பாய்ந்து அதனை அழித்து எரித்து விடுகிறது.

வேற்றுக்கிரக வாசியின் உடைகள்

பறக்கும் தட்டுகள் இருக்கும்போது திண்ணனும் அவன் நண்பனும் விண்வெளி வீரர்கள் அணியும் சிறப்பு உடையை அணிந்திருக்கின்றனர். அவை ஏதோ உலோகத்தால் செய்யப்பட்ட உடைகளைப் போல விண்வெளியில் இருக்கும் அதீத வெப்பத்தில் கருகாதவை போலத் தோன்றுகின்றன. ஆனால் வானமண்டலத்து இளவரசிக்கு மட்டும் பூமியில் இருப்போர் அணியும் உடையே தரப்பட்டுள்ளது.

ஆடல் பாடல் கலை வளம்

பறக்கும் தட்டில் நல்ல தொலை தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதன் வழியாக



திண்ணன் பூமியில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் காண்கிறான். இன்றைக்கு இங்கிருக்கும் 2 ஜி 3 ஜி 4 ஜி தொலை தொடர்பு வசதிகளை அன்றே இப்படம் காட்டுகிறது. பூமியில் வாழும் மனிதர்கள் கலைகளில் சிறந்து விளங்குகின்றனர் என்பதைக் காட்டுவதற்காக பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பலவிதமான குழு நடனங்கள் அந்தந்த மொழிகளில் உள்ள பாட்டுக்களோடு காட்டப்படுகிறது.

திண்ணன் ஒவ்வொரு முறை பொத்தானைத் திருப்பும் போதும் மாநிலத்தைச் சேர்ந்த குழு நடனங்கள் அந்தந்த மொழிப் பாடல்களோடு ஒளிபரப்பாகின்றது. இவ்வாறு வெவ்வேறு இடங்களில் நடக்கின்ற கலைநிகழ்ச்சிகளை அவர்கள் தங்களின் இருப்பிடத்தில் இருந்தே பொத்தான்களைத் திருப்பித் திருப்பி அலைவரிசையை மாற்றிக் காணக்கூடிய வசதி அவர்களிடம் உள்ளது. இன்றைக்கு இருக்கும் தொலை தொடர்பு வசதியை 1964இல் காட்டியிருப்பது வியப்பானது.

அப்போது அமெரிக்காவில் தொலைக்காட்சி வந்துவிட்டதை மக்கள் நம்பியும் நம்பாமலும் இருந்த காலகட்டத்தில் இதுபோன்ற காட்சிகள் மக்களுக்கு விந்தையாகத் தோன்றின. மேனாடுகளில் கம்ப்யூட்டர் வந்த பிறகு குமரிக்கோட்டம் என்ற எம்.ஜி.ஆர். படத்தில் தான் முதன் முறையாக கம்ப்யூட்டர் என்ற சொல் இடம்பெற்றது. கல்லூரிக் கலைவிழாவில் நகைச்சுவை நடிகர் சோ மற்றும் சச்சு ஆகிய இருவரும் நடத்தும் கேள்வி பதில்கள் நிகழ்ச்சியில் சோ கேட்கும் கேள்விகளுக்கு கணினியாக வரும் சச்சு பதில் அளிப்பார். கல்லூரி

மாறு வேடப் போட்டியில் இக்காட்சியும் இடம்பெறும். இதுபோன்ற அறிவியல் தகவல்களை எம்.ஜி.ஆர். படங்கள் மக்களுக்கு முன்கூட்டியே ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தன.

1972 இல் எம்.ஜி.ஆர். வெளிநாடு சுற்றுலா சென்று திரும்பியபோது இனி திரைப்படத் தொழில் இங்கு இலாபகரமாக இருக்காது. வெளி நாட்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வீட்டுக்கு வீடு வந்து விட்டன அதனால் திரையரங்குகள் காலியாகக் கிடக்கின்றன. அதே நிலை தமிழகத்திற்கும் வர அதிக நாள் எடுக்காது என்று எம்.ஜி.ஆர். தயாரிப்பாளர்கள் கூட்டத்தில் பேசினார். அப்போது எவருமே அவருடைய முன் அறிவுத்திறனை பாராட்டாமல் அவரை விமர்சித்தனர். இவர் படங்கள் ஓடாது என்பதால் எந்தப் படமும் ஓடாது என்று இவர் பொறாமையில் பேசுகின்றார் என்று எம்.ஜி.ஆரது பேச்சை விமர்சனம் செய்தவர்களே அதிகம். ஆனால் எம்.ஜி.ஆர். கூறியதுதான் நடந்தது.

இன்றைக்குத் திரையரங்குகளில் போய் பார்ப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதால் திரையரங்குகள் அனைத்தும் வணிக வளாகங்களாகவும் திருமண மண்டபங்களாகவும் குடியிருப்புகளாகவும் மாறி வருகின்றன. இதனை முன்கூட்டியே திரையுலகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எடுத்துக்கூறிய எம்.ஜி.ஆரின் முன்னறிவை பாராட்டியிருக்க வேண்டும். 1972இல் தொலைக்காட்சி வரவால் திரையுலகம் பாதிக்கும் என்பதை எம்.ஜி.ஆர். உறுதியாக நம்பியதால் திரை உலக வாழ்வை அவர் சிறப்பாக நிறைவு செய்து கொண்டார்.

மோதல்

இன்றைக்கு வரும் திரைப்படங்களில் வேற்றுக்கிரகவாசிகளுக்கும் பூமியில் வாழும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல்கள் ஒருவருடைய நிலப்பகுதியை அடுத்தவர் ஆக்கிரமித்தல் போன்றவை ஹாலிவுட் படங்களில் பரவலாக காட்டப்படுகின்றன. முதன்முதலாக கலையரசி படத்தில் வேற்றுக்கிரக வாசிகளுக்கும் பூமியைச் சேர்ந்த எம்.ஜி.ஆருக்கும் மோதல் ஏற்படுவது காட்டப்படுகிறது. இங்கு வந்து இறங்கிய பறக்கும் தட்டை இயக்குவதற்கான ஒரு ரிமோட் கருவி பூமியில் பொருத்தப்பட்டிருந்தது. அந்த பறக்கும் தட்டை தான் இயக்கிக் கொண்டு உயரே பறக்க வேண்டும் என்ற தேவை எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்டபோது பறக்கும் தட்டில் இருந்த திண்ணனின் கையாளுடன் மோதி அவனை வீழ்த்தி விட்டு அந்த ரிமோட் செயல்பாட்டை முடக்கி விடுகிறார். பறக்கும் தட்டுக்குள் போய் ஒளிந்து கொள்கிறார். அதன் பிறகு பறக்கும் தட்டு மேலே பறந்து செல்கிறது.

அந்தப் பறக்கும் தட்டுக்குள்ளேயே ஒரு ரகசிய இடமாக ஒரு பெட்டி உள்ளது. அதன் கீழே இருக்கும் வழியாக திறந்து விட்டால் அந்தப் பெட்டிக்குள் இருக்கும் பொருளோ ஆளோ கீழே விழுந்து விட முடியும். எனவே வேண்டாதவற்றை அந்தப் பெட்டிக்குள் வைப்பது மூலம் அதன் அடிப்பகுதியை திறந்து உள்ளே இருக்கும் தேவையற்ற பொருளை கீழே தள்ளிவிடலாம். புவியிர்ப்பு சக்தி செயல்படும் உயரம் வரை இவ்வாறு வேண்டாதவற்றக் கீழே தள்ளி விட முடியும்.

புவியிர்ப்பு சக்தி இல்லாமை

வேற்று கிரகத்தில் புவியீர்ப்பு சக்தி கிடையாது. அங்கு எந்தப் பொருளும் கீழே விழாது. அங்கிருப்பவர்களால் காலைக் கீழே பதித்து நடக்க இயலாது. ஒரு பொருளை உயரே தூக்கி எறிந்தால் அது வான்வெளியில் மிதந்து கொண்டு தான் இருக்குமே தவிர கீழே தரைப்பகுதியில் வந்து விழ வாய்ப்பில்லை. இதனால் வேற்றுக்கிரகவாசிகள் தாங்கள் தரையில் கால் ஊன்றி நடப்பதற்கு ஒரு விசேஷ காலணிகளை அணிந்து கொள்கின்றனர். ஆம்ஸ்டிராங், ஆல்டிரின் ஆகிய இருவரும் ராக்கெட்டை விட்டு இறங்கி சந்திரமண்டலத்தில் கால் வைத்தபோது கூட அவர்கள் இந்த விசேஷ காலணிகளை அணிந்து இருந்தனர்.

கலையரசி படத்தில் விசேஷ காலணிகள் பற்றிய காட்சி இரண்டு இடங்களில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. பறக்கும் தட்டில் இருக்கும் பெட்டிக்குள் இருந்து கிழே விழுந்த எம்.ஜி.ஆர். தான் விழுந்த பகுதி வான மண்டலம் என்பதை அறிகிறார். அவரால் அங்குக் காலைத் தரையில் பதித்து நடக்க



இயலவில்லை. ஸ்லோ மோஷனில் பறந்து செல்வது போல இக்காட்சி எடுக்கப்பட்டிருந்தது. அப்போது அங்கு ஓர் கோமாளி இசைக்கருவியை மீட்டிக் கொண்டு வருவதைப் பார்க்கிறார். அந்தக் கோமாளியாகவும் எம்.ஜி.ஆரே இரட்டை வேடத்தில் நடித்திருந்தார். இவர் அந்தப் பகுதியில் நடக்கத் தடுமாறும் போது கோமாளி, பூமியிலிருந்து சென்ற எம்.ஜி.ஆருக்கு இரண்டு விசேஷமான செருப்புகளை கொடுத்து அணிந்து கொள்ளச் சொல்கிறான். பிறகு எம்.ஜி.ஆர். நல்லமுறையில் நடந்து செல்கிறார்.

இன்னொரு காட்சியில் பூலோக எம்.ஜி.ஆரை காதலிக்கும் வேற்றுகிரகவாசி இளவரசி ராஜஸ்ரீ வானமண்டலத்தில் பறக்கும் உணர்வைப் பெற வேண்டும் என்பதற்காக தன்னுடைய காலணிகளைக் கழற்றி விட்டு எம்.ஜி.ஆரைப் பார்த்து ஒரு காதல் பாட்டை பாடுவார்.

“நீ இருப்பது இங்கே உன்

நினைவு இருப்பது எங்கே

நெஞ்சில் வாழும் எந்தன் பக்கமா

அதை நேரில் சொல்ல வெக்கமா

நீ இருப்பது இங்கே உன்

நினைவு இருப்பது எங்கே

நிழலும் உனது கைக்கு கிடைக்குமா

நீரின் குமிழி அணையை உடைக்குமா

வாய் இருப்பது வம்பு பேசி வாட்டிடத்தானோ

நம் வளரும் அன்பை சொல்லி இன்பம் ஊட்டிடத்தானோ

காயை திண்ண எண்ணி கனியை கை விடுவேனோ

என் கருத்தில் வாழும் ஒருத்திக்கே நான் துரோகம் செய்வேனோ

தனிமை பயங்கரத்தின் உற்பத்தி சாலை

அதிலே இனிமை காண விரும்புவது தற்கொலை வேலை

உண்மை காதலுக்கே வேற்றுமை இல்லை

நாம் ஒன்றுபட்டால் இங்கு வேறு அதிசயம் இல்லை"

என்ற அந்தப் பாடல் கட்சியில் எம்.ஜி.ஆரின் செருப்பையும் ராஜஸ்ரீ கழற்றி விடுகிறார். எனவே இக் காட்சியில் இருவரும் கால் தரையில் படாமல் மிதந்த படி பாடுவதாகக் காட்டப்பட்டுள்ளது. இளவரசியைக் எம்.ஜி.ஆர். காதலிக்காததால்

காயை திண்ண எண்ணி கனியை கை விடுவேனோ

என் கருத்தில் வாழும் ஒருத்திக்கே நான் துரோகம் செய்வேனோ



என்ற வரிகளைப் பாடுவார். ஆனாலும் ராஜஸ்ரீக்கு அவருடைய பாடலின் கருத்து புரியாததால் தொடர்ந்து பாடி காதலிப்பார்.

இவ்விரண்டு காட்சிகளிலும் விசேஷக் காலணிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

தமிழ்ப் பண்பாடு

வேற்றுக்கிரகவாசிகள் நல்ல ஒழுக்கமும் கட்டுப்பாடும் உடையவர்களாக இருந்தபோதிலும் தமிழருக்கு உரிய சிறப்பான பண்பாடு அங்குள்ள இளவரசிக்கு பானுமதியின் மூலமாக கற்றுத் தரப்படுகிறது. ‘ஒரு மனைவி தனது கணவனை முகமலர்ச்சியோடு பார்க்கவேண்டும்’; ‘அவன் உள்ளம் சோர்ந்து இருந்தால் அவனை உல்லாசப் படுத்த வேண்டும்’ என்ற ராஜஸ்ரீக்கு பானுமதி கற்றுக்கொடுப்பார்.

இதனை ராஜஸ்ரீ உள்வாங்கி எம்.ஜி.ஆர். சோர்வாக இருக்கும்போது இக்கருத்துக்களை நடைமுறைப்படுத்தினார். இக்காட்சி ஒரு பெண் எந்தக் கிரகத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும் கணவனை மனமகிழ்ச்சியோடு வைத்துக் கொள்ள வேண்டியது அவளுடைய பொறுப்பும் கடமையுமாகும் என்ற உயர்ந்த பண்பாட்டை கற்றுத் தருவதாக அமைந்துள்ளது.

வேற்றுக் கிரகத்தில் உணவு

பூமியில் இங்கு பச்சை பசேலென்று செடி கொடிகள் வளர்ந்து பூவும் இலையும் பூவும் காயும் கனியும் நமக்கு உணவாகிறது. இலை தழைகளைத் தின்னும் ஆடு மாடு போன்ற விலங்குகள் நமக்கு

இறைச்சியும் பாலும் தருகின்றன. வான மண்டலத்தில் அல்லது வேற்று கிரகத்தில் இதுபோல் மழை இல்லாததால் இலைக்கறி உணவும் இறைச்சி உணவும் கிடைக்கவில்லை. அங்கு சத்து உருண்டைகளை சாப்பிடுகின்றனர். கோமாளி எம்ஜியார் ஒரு பெரிய கிண்ணத்தில் இருந்து சிறு சிறு உருண்டைகளை எடுத்து வாயில் போட்டு மென்று தின்னும் ஒரு காட்சி அமைந்துள்ளது. அந்த சத்துருண்டைகளை இது இரும்பு சத்து உடையது என்று அவர் விளக்கிக் கூறுவார்.

நிறைவு

அறிவியல் புனைவுக் கதையான கலையரசி வானமண்டலம் என்று குறிப்பிடப்படும் வேற்றுக் கிரகத்தை சேர்ந்த மக்களின் உணவு, உடை, பறக்கும் தட்டை இயக்கும் தொழில்நுட்பம், எதிரிகளை அழிக்கும் அக்னி அஸ்திரம், சக்து நிறைந்த சிறப்பான உணவுகள், தொலைதொடர்பு முன்னேற்றம், போன்ற பல அறிவியல் தொழில் நுட்பச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

3. ஆசை முகம் படத்தில் மருத்துவ அறிவியல்

பத்தாம்பசலித்தனமான் சமயக் கருத்துகளுக்கு எதிராக அறிவியல் கருத்துக்கள் நிறைந்த படங்களைத் தெரிவு செய்து நடித்த எம்.ஜி.ஆர். பிளாஸ்டிக் சர்ஜரி எனப்படும் முகமாற்று அறுவை சிகிச்சையை மையமாகக் கொண்ட கதைக்களத்தை ஒப்புக்கொண்டார். இப்படத்தின் பெயர் ஆசைமுகம். இப்படத்தை மோகன் புரோடக்சன்சின் மோகன்ராம் தயாரித்தார், டி.என். பாலு எழுதியிருந்தார். ஆருர்தாஸ் வசனங்களையும் பாடல்களை வாலி பாடல்களையும் எழுதினர். எஸ்எம் சுப்பையா இசையமைத்தார். பாடல்கள் தேனாக இனித்தன. சண்டைக் காட்சிகளை R.N. நம்பியார் இயக்கினார். சத்யா ஸ்டூடியோவில் படம்பிடிக்கப்பட்ட ஆசை முகத்தை இயக்கியவர் புல்லையா.

முகம் என்னும் தலைப்பு

மகாகவி பாரதியார் கண்ணன் பாட்டு என்ற தொகுப்பில் அமைந்த கண்ணன் என் காதலன் என்ற கவிதையில்

ஆசை முகம் மறந்து போச்சே –இதை

ஆரிடம் சொல்வேனடி தோழி?

நேச மறக்கவில்லை நெஞ்சம் – எனில்

நினைவு முகம் மறக்க லாமோ?”.

என்று இயற்றிய வரிகளில் இருந்து ஆசை முகம் என்ற தலைப்பு எடுக்கப்பட்டது. இப்படம் முகமாற்று அறுவை சிகிச்சையைக் கருவாகக் கொண்டது என்பதால் முகம் என்ற சொல் வரும் அழகான தலைப்பு எம்.ஜி.ஆர். நடித்த இப்படத்துக்குச் எம்.ஜி.ஆர். முகராசி கொண்டவர் என்ற நம்பிக்கை மக்களிடையே ஆழமாக வேரூன்றி இருந்ததால் முகம் என்ற சொல் தலைப்பில் இடம் பெற்றது. சூட்டப்பட்டது. எம்.ஜி.ஆர். ஜெயலலிதா நடித்து தேவர் தயாரித்த குறுகிய காலத் தயாரிப்பு ஒன்றிற்கு முகராசி என்றே பெயர் சூட்டப்பட்டது அப்படம் நுறு நாள் ஒடி வெற்றி வாகை சூடியது.



அடுத்து ரேவதியும் அவர் கணவர் சுரேஷும் நடித்து வந்த இன்னொரு முக மாற்று அறுவை சிகிச்சை பற்றிய படத்துக்குப் புதிய முகம் என்று பெயர் சூட்டப்பட்டது.

ஆசை முகம்

பாரதியாரின் பாடல் வரியிலிருந்து ஆசை முகம் என்ற பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப்பெயர்ப் பொருத்தத்தை உறுதி செய்யும் வகையில் படத்தின் கடைசி காட்சியில் யாருடைய முகம் உண்மையானது என்பதை அறிவதற்காக திராவகத்தை முகத்தில் ஊற்ற வேண்டும்.; சிகிச்சை செய்யப்பட்ட முகம் என்றால் மேல் தோல் உரிந்து அவருடைய உண்மையான முகம் வெளிப்படும். ஆனால் சிகிச்சைக்கு உட்படுத்தப்படாத இயற்கையான முகம் என்றால் திராவகம் முகத்தில் பட்டதும் முகம் எரிந்து தோல் கரிந்து புண்ணாகிவிடும் என்ற தகவலை முகம் மாற்று அறுவை சிகிச்சை செய்த விஞ்ஞானி தெரிவித்தபோது, கதாநாயகி சரோஜாதேவி வேறு வழியில்லாத காரணத்தால் இருவரது முகத்தின் மேலும் திராவகத்தை ஊற்றுங்கள். தான் நேசித்த ஆசைமுகம் அழகிழந்து போனாலும் பரவாயில்லை மனோவின் நல்ல மனத்தையே தான் பெரிதும் நேசிப்பதாகக் கூறுகிறார். ஆக இந்தக் காட்சியில் அவர் தான் நேசித்த ஆசைமுகம் என்று சொல்லும் வசனம் படத்தின் பெயர் பொருத்தத்தை நிலை நாட்டுகிறது.

பிளாஸ்டிக் சர்ஜரி - சொற்பொருள்

பிளாஸ்டிக் சர்ஜரி என்ற சொல் உடலில் செய்யப்படும் உருவ மாற்று அறுவை சிகிச்சையைக் குறிக்கும். ‘பிளாஸ்டிக்கோஸ்’ என்ற கிரேக்கச்

சொல்லிலிருந்து தோன்றியது. பிளாஸ்டிக்கே என்ற சொல்ளுக்கு ‘தசையைக் கொண்டு செய்யப்படும் உருவ மாற்றுக் கலை’ என்பது பொருள் ஆகும். பிளாஸ்டிக்கை என்றால் உருவம் அல்லது மோல்ட் [mould] என்பது பொருள். பிளாஸ்டிக் சர்ஜரி எனப்படும் உருவ மாற்று அறுவை சிகிச்சை 1598இல் தொடங்கிவிட்டது. அப்போது இச்சிகிச்சைக்கு பிளாஸ்டிக் சர்ஜரி என்ற பெயர் கிடையாது. ஆனால் 1839 பிளாஸ்டிக் என்ற சொல்லுக்கு பெட்ரோலில் இருந்து தயாரிக்கப்படும் இன்ஜினியரிங் மெட்டீரியல் என்ற பொருள் தோன்றியது.

பிளாஸ்டிக் சர்ஜரியின் தோற்றம்

பிளாஸ்டிக் சர்ஜரி எனப்படும். உருவ மாற்று அறுவை சிகிச்சை தோன்றிய இடம் இந்தியா என்பதில் ஐயமில்லை. கிறிஸ்து பிறப்புக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு சுஸ்ருதர் என்ற வைத்தியர் கண்ணில் கண் புரை அறுவை சிகிச்சையும், சிதைந்த மூக்கை அழகாக மாற்றி வைக்கும் சிகிச்சையையும் செய்து இருக்கிறார். இவரும் சரக்கா எனப்படுவோரும் எழுதிய மருத்துவ சாஸ்திரங்களை கிபி 750 ஆண்டில் சில மருத்துவ ஞானிகள் அரபி மொழியில் மொழி மாற்றம் செய்தனர். அரபி மொழியிலிருந்து இந்திய மருத்துவ முறைகள் ஐரோப்பிய மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டன. இத்தாலியில் சுஸ்ருதாவின் சிகிச்சை முறைகளை பல நூற்றாண்டுகளாக மருத்துவர்கள் பின்பற்றி வந்தனர்.

மூக்கு அறுவை சிகிச்சையை ரைனோ ப்ளாஸ்டிக் என்று அழைத்தனர். கிரேக்க மொழியில்

ரைஸ் என்றால் மூக்கு, பிளாஸ்ஸின் என்றால் வடிவம். ரைனோ பிளாஸ்டி என்றால் மூக்கு அறுவை சிகிச்சை ஆகும். இந்தியாவில் நடந்த முகவடிவமைப்பு சிகிச்சை குறித்து குமார் வைத்தியா என்பவர் ஜென்டில் மென்ஸ் மேகஸின் என்ற இதழில் 1794 ஆம் ஆண்டு ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளார்.

ஜோசப் கான்ஸ்டன்டைன் கார்ப்யு என்பவர் இந்தியாவில் இருபது ஆண்டுகள் தங்கியிருந்து இங்கே பின்பற்றப்பட்டு வந்த பிளாஸ்டிக் சர்ஜரி மருத்துவமுறைகளை கற்றுக்கொண்டு தன்னுடைய நாட்டுக்குச் சென்றார்.

முகமாற்று அறுவை சிகிச்சையின் வகைகள்

பிளாஸ்டிக் சர்ஜரியில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று சிதைந்து போனவற்றை சரி செய்வது [reconstructive surgery]; மற்றொன்று அழகுக்காக உறுப்புகளின் தோற்றத்தை மாற்றி அமைப்பது [cosmetic surgery]. விபத்து மற்றும் தீயினால் வெந்து போன முகங்களை வேறு உறுப்புகளை சரி செய்வது முதல் வகை ஆகும். நடிகைகளும் வயதான பெண்களும் இளம்பெண்களும் அழகுக்காக தங்களின் மூக்கு [ஸ்ரீ தேவி] தாடை, மார்பு போன்றவற்றை அழகாக மாற்றி அமைப்பது இரண்டாவது வகை ஆகும்.

ஆங்கிலப் படங்களில் முகமாற்று சிகிச்சை

தமிழில் ஆசைமுகம் படம் வந்தது போல ஆங்கிலத்திலும் முகமாற்றம் பற்றிய கதைகள் வெளிவந்து வசூலைக் குவித்தன. 1964இல் ஃபேஸ் ஆப் தி அதர் என்ற நாவல் எழுதப்பட்டது.

இக்கதையை இரண்டு ஆண்டுகள் கழித்து 1966இல் படமாக எடுத்தனர்.

1990இல் எழுதப்பட்ட face off என்ற நாவலை ஆண்டு படமாகத் தயாரித்தனர். அடுத்தது face off என்ற ஆங்கிலப்படத்தின் கதை ஆசை முகத்தின் கதையைப் போன்றதாகும். ஒரு போலீஸ்காரர் தன் முகத்தை ஒரு கொள்ளைக்காரனை போல மாற்றிக் கொண்டு விடுவார். இது தெரிந்ததும் அந்தக் கொள்ளைக்காரன் தனது முகத்தைப் போலீஸ்காரர் போல மாற்றிக்கொள்கிறான். இவர்களுக்குள் நடக்கும் பிரச்சினைகள்தான் face-off என்ற கதை ஆகும்.

ஆசைமுகம் கதை

ஆசை முகம் படத்தில் வஜ்ரவேலு என்ற கெட்டவன் மனோகர் என்ற பணக்காரனின் சொத்துக்கு ஆசைப்பட்டு, தனது முகத்தை மனோகர் போல மாற்றிக் கொண்டு அவரது வீட்டிலேயே வந்து தங்கி இருந்து அவனது தாய் தகப்பனை நம்பவைத்து அவர்களின் சொத்தைப் பெற சதித்திட்டம் தீட்டுகிறான். முகமாற்று அறுவை சிகிச்சை பற்றி இன்னொரு படத்தையும் இங்கு குறிப்பிடலாம்.

1942 ல் வெளிவந்த பிளாக் டிராகன் [black dragon] என்பதாகும். இதில் ஆறு அமெரிக்க முதலாளிகளைக் கடத்திக் கொண்டு போய் வைத்த தீயவர்கள் அந்த அமெரிக்க முதலாளிகளின் முகங்களைப் போலத் தங்களின் முகங்களை மாற்றிக் கொண்டு அவர்களின் சொத்தை அபகரிக்கத் திட்டம் இடுவர். இரண்டாம் உலக யுத்தம் தொடங்குவதற்கு முன்பு அவர்களின் சொத்துக்களை

அடைந்து விடவேண்டும் என்ற நோக்கத்தில் அந்த 6 பேரும் முகமாற்று அறுவை சிகிச்சை செய்து கொள்வதாக எடுக்கப்பட்ட படமாகும். ஆசைமுகம் கதையை போன்றதுதான் இந்த கதையும் எனலாம்.

ஆங்கிலம்-தமிழ் படத்தின் ஒற்றுமை

Face off படம் 1997 இல் வெளிவந்தது. ஆனால் ஆசை முகம் 1965 இல் வெளிவந்தது. இரண்டிலுமே முகமாற்று அறுவையின் போது நடைபெறும் விஷயங்கள் ஒன்று போல உள்ளன. எஃப் பி ஐ ஏஜன்ட்டாக ஆக ஜான் டிராவோல்ட்டாவும் கெட்டவனாக நடித்திருந்த நிகோலஸ் கேஜ் என்பவரும் முக மாற்று அறுவை சிகிச்சைக்கு உட்பட்டவர்கள். இருவரும் இடம் மாறி செயல்படுகிறார்கள்.

ஆசை முகத்தில் முக மாற்று அறுவை சிகிச்சை காட்சியில் வஜ்ரவேலு மேலே நான்கு வளையங்கள் அமைக்கப்பட்டிருக்கும். டியுப் லைட் போல காட்சியளிக்கும் ஒளி வளையங்களுக்குள் மாறி மாறி ஒளி வீசிக்கொண்டே இருக்கும். அப்போது கணினித் திரையில் முக மாற்றம் நடைபெறுவது தெரியும். சிகிச்சை செய்யும் விஞ்ஞானி திரையைப் பார்த்தபடி ஒளியை மாற்றி அளிப்பார். லேசர் சிகிச்சை போலத் தோன்றும். ஆனால் முகத்திற்கு மேலே ஒரு பிளாஸ்டிக் மோல்டு பொருத்தப்பட்டு பின்பு நீக்கப்படுவதாக காட்டப்படும். கணினித் திரையில் இதயத்துடிப்பு காட்டப்படுவது போல ஒரு காட்சி ஆங்கிலப்படத்தில் காட்டப்படும். தமிழ்ப் படத்தில் இக்காட்சி கிடையாது.



முகத்தின் தோற்றம் மாறி வருவதை பழைய முகத்திலிருந்து கண்ணும் மூக்கும் மாற்றப்பட்டு புதிய முகம் தோன்றும். அக்காட்சி கணினி திரையில் தோன்றும். இம்மாற்றம் ஆங்கிலப்படத்தில் மேலே இருந்து கீழே மாறிக் கொண்டு வருவதாக காட்டப்படும். முதலில் புதிய முகத்தின் கண்கள் மட்டும் மாறி இருக்கும், பிறகு மூக்கு அதன் பிறகு வாயும் என மேலிருந்து கீழாக மாற்றம் காட்டப்படும். இறுதியில் மாஸ்க் போன்ற ஒரு முகமூடி நீக்கப்பட்டு புதியமுகம் வந்துவிட்டதாக உணர்த்தப்படும். இந்த முகமுடி கழற்றப்படும் காட்சி ஆசை முகம் படத்தில் இல்லை.

ஆசை முகம் படத்தில் கணினித் திரையில் முகமாற்றம் காண்பிக்கப்படும். அதன் பின்பு வஜ்ரவேலு [ராமதாஸ்] மனோகராக [எம்.ஜி.ஆர்.] மாறி இருக்கும் காட்சியைத் திரையில் காணலாம். அறுவை சிகிச்சையினால் உண்டாகும் மாற்றத்தைக் காட்டுவதில் ஆங்கிலப் படத்துக்கும் தமிழ்ப்

படத்துக்கும் பெரிய வேறுபாடு எதுவும் கிடையாது. இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த தமிழ் படத்தில் ஆங்கிலப் படத்தை விட சிறப்பாகவே காட்சி அமைந்திருப்பதைக் காணலாம்.

முகத்தை மாற்றிய இளம்பெண்

நிஜ வாழ்வில் முகமாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்ட முக்கியமான இரண்டு சம்பவங்களைப் பற்றி இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். ஒருவர் ஈரானில் வாழ்ந்த ஸகர் என்ற 22 வயது பெண். இவர் ஹாலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜோலி போல தன் முகத்தை மாற்ற வேண்டும் என்பதற்காகப் படிப்படியாக அறுவை சிகிச்சை செய்து கொண்டே வந்தார். எதிர்பார்த்தபடி அவருடைய முகம் ஏஞ்சலினா ஜோலி போல இல்லை. மிக மிக அசிங்கமான குரூரமுகமாக மாறிவிட்டது. 50க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் செய்தும் பார்த்த ஏஞ்செலினா ஜோலியின் முகம் போல அமையாததால் அவர் தன்னுடைய படங்களை இணையத்தில் வெளியிட்டார்.

ஈரானில் இறைவன் கொடுத்த உருவத்தை மாற்றும் உரிமை நமக்கு கிடையாது என்ற காரணத்தால் முகமாற்று அறுவை சிகிச்சை அல்லது உருவ மாற்று அறுவை சிகிச்சை என்பது தடை செய்யப்பட்டுள்ளது. சகர் என்ற பெண் முகமாற்று அறுவை சிகிச்சை செய்ததின் மூலம் சட்டத்திற்குப் புறம்பான செயலில் ஈடுபட்டார் என்று இவரைப் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

முகத்தை மாற்றிய இளைஞர்

முகம் மாற்று அறுவை சிகிச்சையில் பிரபலமான இன்னொருவர் பாடகர் மைக்கேல் ஜாக்சன் ஆவார். ஆப்பிரிக்க அமெரிக்கரான இவர் தன் ஐந்தாம் வயதில் 1964 ஆம் ஆண்டு மேடையில் தோன்றி பாடினார். 1969 ஆம் வருடம் வெற்றிகரமான பாடகராக உருவாகி விட்டார். 1971இல் இவருடைய மான் போன்ற மருண்ட விழிகளும் கன்னக் கதுப்புகளும் இனிமையான குரலும் சற்று மாறத் தொடங்கின. பதின்பருவத்தில் ஏற்பட்ட மாற்றம் என்றாலும் இந்த இயற்கையான மாற்றத்தை அவரால் சகிக்க இயலவில்லை.

1973 ஆம் ஆண்டில் மைக்கேல் ஜாக்சனின் முகத்தில் சுவடுகள் குழந்தை குமடுகள் மறைந்து தாடை எலும்புகள் வெளியே தெரிந்தன. 18 ஆவது வயதில் இவர் புகழின் உச்சத்தை அடைந்தார். இவர் மீது பொறாமை கொண்ட அவருடைய சகோதரர்கள் இவரை 'பெரிய மூக்கன்' என்று கூறி கேலி செய்து வந்ததால் இவருக்குப் பருக்கள் பூத்த தன் முகமும் பெரிய மூக்கும் அருவருப்பாக தோன்றியது.

1979 ஆம் ஆண்டுமைக்கேல் ஜாக்சன் தனது ஐந்தாவது இசை ஆல்பத்தை வெளியிட்டபோது, அவர் முகத்தில் சில மாற்று அறுவை சிகிச்சைகளைச் செய்திருந்தார். இருபத்தோராம் வயதில் தன் பெரிய மூக்கை மாற்றி சிறியதாக வைத்துக்கொண்டார். அடுத்தடுத்து அவர் ஒவ்வொரு சிகிச்சை முறையாக மேற்கொண்டு வந்ததனால் அடுத்த பத்தாண்டுகளில் 1989 ஆம் ஆண்டு தாடையின் நடுவில் ஒரு பள்ளம் செயற்கையாக அமைக்கப்பட்டிருந்தது. மூக்கு

முன்பைவிட இன்னும் மெலிவாகக் காட்சியளித்தது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் அவர் தன் தோலை வெள்ளை வெளேர் என்று மாற்றிக்கொண்டார். அவருடைய இயற்கையான தோலின் கருப்பு நிறம் மாற்றப்பட்டுவிட்டது. நான்காண்டுகளில் அவருடைய உதடுகள் இன்னும் சிறியனவாக மாறின. அவருடைய சுருள் முடி சுருள் அற்றதாக மாற்றப்பட்டது. இவ்வாறு அவர் மெல்ல மெல்ல தன்னுடைய கண் மூக்கு வாய் கன்னம் தோலின் நிறம் என மாற்றிக் கொண்டே வந்ததில் 2009ஆம் ஆண்டு திடீரென இறந்து போனார். முகமாற்று அல்லது பிளாஸ்டிக் சர்ஜரி அறுவைசிகிச்சை பக்கவிளைவுகள் தொடர் அறுவை சிகிச்சை செய்பவர்களுக்கு உயிருக்கு ஆபத்தாக முடிந்து விடுகின்றன.

ஆசை முகம் படத்தில் ஆள் மாற்றம்

ஆசை முகம் படத்தில் வில்லனான நம்பியாரின் கையாளாக இருக்கும் ராம்தாஸ் எம்.ஜி.ஆரைப் போல முகத்தை மாற்றிக்கொண்டு எம்.ஜி.ஆரின் வீட்டில் வந்து தங்கி விடுகிறார். வெளியூருக்குச் சென்றிருந்த உண்மையான எம்.ஜி.ஆர். திரும்பி வரும்போது அடிபட்டு கிடந்ததாக தூக்கிவந்த போலி எம்.ஜி.ஆர். தலையில் அடிபட்டததால் தனக்கு எல்லாம் மறந்து விட்டதாகச் சொல்லி தன்னுடைய இருப்பைத் தக்க வைத்துக் கொள்கிறார். உண்மையான எம்.ஜி.ஆரை முரடன் என்றும் போலி என்றும் குற்றம் சாட்டுகின்றனர்.



போலீசில் பிடித்து கொடுக்க வேண்டும் என்று மிரட்டுகின்றனர்.

மனோகர் தன் வீட்டில் இருந்து கிளம்பிச் சென்று தன் காதலி செல்வியை எச்சரிக்கை செய்துவிட்டு பல ஆண்டுகளுக்கு முன்பு தன் வீட்டை விட்டு புறப்பட்டுச் சென்ற தன் அப்பாவின் சித்தப்பாவைப் போல தாடி மீசை வைத்து உருவத்தை மாற்றிக் கொண்டு தன் வீட்டிலேயே வந்து விருந்தினராகத் தங்கிக் கொள்கிறார். இங்கு உண்மையைப் போலி என்றும் போலியை உண்மை என்றும் நம்புகின்ற வினோதமே கதையின் முக்கிய அம்சமாகும்.

ஆள் மாறாட்டம் பற்றிய உண்மை வஜ்ராவேலுவின் மனைவிக்கு தெரியும் அவள் மனோகரின் காதலியிடம் தெரிவிக்கிறாள் இந்த கதையில் உண்மை தெரிந்தவர்கள் இரண்டு பேர் இருந்தும் கூட உண்மையான ஆளைக் கண்டுபிடிக்க இயலாத குழப்பம் நீடித்துக் கொண்டே போகிறது.

இதனால் படம் பார்ப்பவர்களுக்கும் குழப்பம் இருந்து கொண்டே இருக்கும்.

பாடல் காட்சிகளில் போலியும் நிஜமும்

முகமற்றத்தினால் ஏற்படும் குழப்பங்களை ஆசை முகம் படம் நீட்டித்துக் கொண்டே போகிறது. வஜ்ரவேலுவுக்குப் பழைய நினைவுகளை மீட்டுக் கொண்டு வருவதற்காக அவர் சென்ற பழைய இடங்களுக்கு செல்வி அழைத்துப் போக வேண்டும் என்று மருத்துவர் அறிவுறுத்துவார். அதன்படி செல்வியாக நடிக்கும் சரோஜாதேவி வஜ்ரவேலு எம்.ஜி.ஆரை அவர்கள் காதலித்த இடத்திற்கு அழைத்துச் செல்வார். அங்கு வஜ்ரவேலுக்கு எதுவுமே நினைவுக்கு வராது. போலி எம்.ஜி.ஆரை உண்மை எம்.ஜி.ஆர். என்று நம்பி சரோஜாதேவி கலங்கி அழுவார்.

வஜ்ரவேலு இரவு ஏழு மணிக்கு தன்னை வந்து தனியாக சந்திக்கவேண்டும் என்று செல்வியுடன் கூறுவதை ஒளிந்திருந்து கேட்ட உண்மையான



எம்.ஜி.ஆர்., வஜ்ரவேலுவைக் கட்டிப்போட்டு விட்டு தான் அந்த இடத்திற்குச் சென்று செல்வியுடன்

''என்னைக் காதலித்தால் மட்டும் போதுமா

உன் கைகளில் வரவும் வேண்டுமா

இந்தக் கைகளில் வந்தால் போதுமா

நீ கேட்டதைத் தரவும் வேண்டுமா

ஊரென்ன சொல்லும்

சொல்லட்டுமே

உறவென்ன பேசும்

பேசட்டுமே

காதலர் நெஞ்சம்

கொஞ்சட்டுமே

காவிய வாழ்வை

மிஞ்சட்டுமே

காவிரி கெண்டை

கண்களிலே

தாமரைப் பொய்கை

கன்னத்திலே

நாயகன் வந்தான்

பக்கத்திலே

நாயகி விழுந்தாள்

வெட்கத்திலே

ஆசைகள் தொடங்கும்

நெஞ்சத்திலே

ஆடி அடங்கும்

மஞ்சத்திலே

மாந்தளிர் மேனி என்னருகே

மாந்தளிர் மேனி என்னருகே

மன்னவன் தோள்கள் என்னருகே''

என்று பாடுவார்.

இந்தப் பாடல் போலி எம்.ஜி.ஆருக்காக எழுதப்பட்ட பாடல் என்பதை அதன் வரிகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். ஆனால் படத்தில் உண்மையான எம்.ஜி.ஆர். பாடுவதாக இந்தக் காட்சி எடுக்கப்பட்டிருக்கும் உண்மையான எம்.ஜி.ஆர். இந்தக் கருத்துடைய வரிகளைப் பாடுவாரா? எனவே இப் பாடல் வரிகள் மனோகர் எம்.ஜி.ஆருக்குப் பொருந்தாது. இக்குலப்பத்துக்குக் காரணம் என்ன? என்று ஆராய்ந்தால் பாடல் காட்சிகளை முதலில் எடுத்துவிட்டனர். அதனால் இந்தப் பாட்டில்



வஜ்ரவேல் நடித்திருப்பதாகத்தான் எடுத்தனர். கெட்டவன் வஜ்ரவேலு சரோஜாதேவிக்கு முத்தம் கொடுக்க முயற்சி செய்வதும் மடியில் செல்வியை படுக்கப்போட்டு அணைத்தபடி அவளைப் பார்க்கும் காட்சியும் இப்பாடல் காட்சியில் இடம்பெற்றன. பாட்டு காட்சியும் பாடல் வரிகளும் வஜ்ரவேலுவுக்கு உரியனவாக இருக்கும்.

படத்தில் பாட்டுக்காட்சியை இணைத்த போது வில்லன் கதாநாயகியுடன் டுயட் பாடுவதை இரசிகர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதால் வஜ்ரவேலுவைக் கட்டிப் போட்டுவிட்டு மனோகர் எம்.ஜி.ஆரே அந்தப் பாடல் காட்சியில் இடம் பெறுவதாக மாற்றிவிட்டார்கள். பாட்டுக் காட்சிக்கு முன்னும் பின்னும் வருகின்ற காட்சிகளும் வசனங்களும் மனோகர் எம்.ஜி.ஆர். நடித்தவையாக இருக்கும்.

பாடல் காட்சி முடிந்த பிறகு மனோகர் செல்வியிடம் ‘இனிமே நீ என் வீட்டுக்கு வர வேண்டாம். உன்னைப் பார்க்கும் போதெல்லாம் நான் உன்னிடம் தவறாக நடந்து விடுவேனோ என்று எனக்குள் தோன்றுகிறது. நீ உன் தூய்மையில் இருந்து ஒரு துளி கூட தவறக்கூடாது’ என்ற எச்சரிக்கை செய்துவிட்டு போய் விடுவார். கதையை தெளிவாக உருவாக்கிக் கொண்டு காட்சிகளைப் படமெடுக்காத கொள்ளாத காரணத்தால் ஏற்படும் குழப்பம் இது.

படத் தொகுப்பில் ஏற்பட்ட குழப்பம்

நம்பியார் ‘உண்மையான எம்.ஜி.ஆரை அடித்து அந்த இடத்துக்கு கொண்டு வா’ என்று தன் ஆட்களிடம் சொல்லும் காட்சி முதலில்

வரவேண்டும். ஆனால் காரில் வந்த போலி எம்.ஜி.ஆரை நம்பியாரின் ஆட்கள் அடித்து போட்டுவிட்டு போன பிறகு இக்காட்சி இடம்பெறும். உண்மையான எம்.ஜி.ஆர். தான் தங்கியிருந்த ஓட்டல் அறையில் இருந்து தன்னுடைய பொருட்கள் அனைத்தும் தொலைந்து போய்விட்டன என்று ஹோட்டல் உரிமையாளரிடம் முறையிடுவார். பின்னர் அவரிடம் 'ஒரு ரயில் டிக்கட் மட்டும் எடுத்துக் கொடுங்கள் போதும்' என்பார். அதன் பிறகு இவர் கிளம்பி செல்வார் இக்காட்சிக்குப் பிறகு நம்பியார் தன் ஆட்களுக்குக் கட்டளையிடும் காட்சி காட்டப்படும். இவை இரண்டும் படத் தொகுப்பு பிர்ச்னையால் ஏற்பட்ட குழப்பம் ஆகும்.

இரசிகர்களின் வரவேற்பு குறைவு

ஆங்கிலப் படத்தை விடச் சிறப்பாக அறிவியல் தொழில் நுட்பக் காட்சிகள் அமைந்திருந்தும் கதைக்களம் சரியாக அமையாததாலும் எடிட்டிங் சரியாக செய்யப்படாததாலும் இப்படம் சுமாரான வெற்றியைப் பெற்றது. இரசிகர்கள் நல்ல எம்.ஜி.ஆரை போலி எம்.ஜி.ஆர். என்று அவரது பெற்றோர்களும் காதலிகளும் கருதுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இந்த படம் பெரிய அளவில் வெற்றி பெறாவிட்டாலும் தயாரிப்பாளருக்கு நட்டத்தை ஏற்படுத்தவில்லை.

நிறைவு

எம்.ஜி.ஆர். நடித்து 1963-ல் வந்த அறிவியல் தொழில் நுட்பப் படம் கலையரசி. அதன் பிறகு 1965இல் வந்த படம் ஆசை முகம். இரண்டும் சுமாரான வெற்றியையே பெற்றன. எங்க வீட்டுப் பிள்ளை, ஆயிரத்தில் ஒருவன் போன்ற வண்ணப்

படங்களுக்குப் பிறகு ஆசைமுகம் வெளிவந்தது. ஆசைமுகம் வெளிவந்து ஒரு மாதத்துக்குள் அன்பே வா என்ற வண்ணப்படம் வெளிவந்ததால் ஆசைமுகம் திரையரங்கை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இரசிகர்கள் அன்பே வா படத்தை பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். ஆனால் மறு வெளியிடுகளில் ஆசை முகம் விநியோகஸ்தர்களுக்கு நல்ல வெற்றியைப் பெற்று தருகிறது.

ஆசை முகம் - அன்பே வா - முகராசி

ஆசை முகம் திரையரங்கை விட்டு வெளியேறியதற்கு இன்னொரு முக்கிய காரணமும் உள்ளது. அன்பே வா வருவதை அறிந்த சாண்டோ சின்னப்பா தேவர் அந்த சமயத்தில் தன்னுடைய படம் ஒன்றையும் திரையிட வேண்டும் என்பதில் குறிக்கோளாக இருந்து பன்னிரெண்டு நாட்களில் எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதாவை கொண்டு குறுகிய காலத் தயாரிப்பாக முகராசியை வெளியிட்டார். அன்பே வா வெளியான மறு மாதமே முகராசி திரைக்கு வந்தது. அன்பே வா படத்துக்கு போய் டிக்கெட் கிடைக்காமல் வந்தவர்கள் அருகிலிருந்த திரையரங்கில் முகராசி படத்தைப் போய் பார்த்தனர். எளிமையான கதையும் ஜெயலலிதாவின் அழகும் கவர்ச்சியும் படத்துக்கு வெற்றியைத் தேடித் தந்தது. முகராசி 100 நாட்கள் ஓடி வெற்றி பெற்றது.

4. நீரும் நெருப்பும் காட்டும் அறிவியல் கருத்து

எம்.ஜி.ஆர். படங்களில் நீரும் நெருப்பும் என்ற படம் சயாமிஸ் இரட்டையர்கள் என்று அழைக்கப்படுகின்ற ஒட்டிப் பிறந்த இரட்டை குழந்தைகளைப் பற்றிய படம் ஆகும். இக்குழந்தைகள் அறுவை சிகிச்சையினால் பிரிக்கப்படும் போது உருவாகும் உணர்வுப் பிரதிபலிப்புகளைப் பற்றிய படமாக கார்சிகன் பிரதர்ஸ் என்ற படம் ஆங்கிலத்தில் எடுக்கப்பட்டது. அதன் மறு ஆக்கமாக தமிழில் அபூர்வ சகோதரர்களும் அதன் மறு பதிப்பாக நீரும் நெருப்பும் எடுக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். நடித்த குடியிருந்த கோயில் திரைப்படம் ஒட்டி பிறந்த இரட்டை குழந்தைகளைப் பிரித்தெடுத்து இரண்டு குழந்தைகளாக வளர்ந்து வந்த போதும் அவர்களுக்கு இடையே உணர்ச்சி குழப்பங்கள் எதுவும் இல்லை. இப்படம் 18-3-1968 ல் வெளிவந்தது. இது சீனா டவுன் என்ற ஆங்கிலப்படத்தின் மறு ஆக்கமாகும். 16-1o-71இல் வெளிவந்த நீரும் நெருப்பும் படம் அபூர்வ சகோதரர்கள் என்ற படத்தில் மறுபதிப்பாக

எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் நடித்து வெளிவந்தது. அபூர்வ சகோதரர்கள் படம் எம் கே ராதாவும் பானுமதியும் நடித்து வெளிவந்த வெற்றிப் படமாகும். எம்.ஜி.ஆர். அது போன்ற ஒரு படத்தில் நடிக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கனவு கண்டு வந்தார். எனவே இது அவருடைய கனவுப் படமாக எடுக்கப்பட்டது. ஆனால் அவர் நினைத்த படி அப்படம் பெரிய வெற்றியைப் பெறவில்லை.

ஜெமினியின் உரிமையாளர் எஸ். எஸ் வாசன் மறைந்தபோது எம்.ஜி.ஆர். அவரைக் கௌரவிப்பதற்காக ஒப்புக்கொண்ட படம் அபூர்வ சகோதரர்களின் மறு ஆக்கமான நீரும் நெருப்பும் ஆகும். ஜெமினி பட நிறுவனத்தார் நீரும் நெருப்பும் படத்தைத் தமிழில் எடுத்தனர். இந்தியில் இந்தப் படத்தை ராஜேந்திரகுமாரையும் வைஜெயந்தி மாலாவையும் வைத்து எடுத்தனர்.



M.K. ராதாவுடன் எம்.ஜி.ஆர்.

கதையின் மையக் கரு

நீரும் நெருப்பும் படத்தில் ஒரு குழந்தையின் உணர்வுகள் அடுத்துப் பிறந்த குழந்தையையும் தாக்கும் என்பதுதான் கதையின் முக்கியக் கருத்து. மணிவண்ணன் முதலில் பிறந்தவன். கரிகாலன் அடுத்துப் பிறந்தவன். ஆனால் இருவரும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள். இவர்களை அறுவை சிகிச்சை மூலம் பிரித்தெடுத்தவர் ஒரு மருத்துவர். குழந்தைகள் பிறந்த வேளையில் அவர்களுக்காக அரண்மனையில் விழா நடத்தியபோது அவர்களின் தாய் தந்தையை எதிரி மன்னன் தன் ஆட்களுடன் வந்து கொலை செய்துவிடுவான். குழந்தைகளைக் காப்பாற்றுவது அரண்மனைவாசிகளின் முக்கியக் கடமையாகிறது. அரண்மனைக்கு நெருக்கமான உறவு கொண்ட ஒரு தம்பதி மணிவண்ணனையும், தளபதி கரிகாலனையும் எடுத்துக்கொண்டு அரண்மனையை விட்டு அகன்று விடுகின்றனர். வசதியான தம்பதியரிடம் வளர்ந்த மணிவண்ணன்



அன்பானவனாகவும், தளபதியிடம் வளர்ந்த கரிகாலன் சற்று முரட்டு குணம் படைத்தவனாகவும் வளர்ந்து வருகின்றனர். தாய் தந்தையரைக் கொன்றவர்களை மீண்டும் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்விரு சகோதரர்களும் வளர்ந்து வருகின்றனர்.

மணிவண்ணன் ஒரு பெண்ணைக் காதலிக்கும் போது அந்த உணர்வுகள் கரிகாலனைத் தாக்குகின்றன. கரிகாலன் இவர்களைத் தேடிப் போகின்றான். அண்ணனின் காதலியைக் கண்டதும் அவள் மீது கரிகாலன் காதல் கொள்கின்றான். அப்போது மணிவண்ணன் வந்து தன்னுடைய காதலியை தன் தம்பியிடம் இருந்து காப்பாற்றி விடுகிறார். இந்தக் குழப்பம் இக்கதையின் ஒரு முக்கிய மையமாகும்.

அண்ணன் எம்.ஜி.ஆரின் காதலியைத் தம்பி எம்.ஜி.ஆர். காதலிப்பதை இரசிகர்கள் ஏற்றுக்கொள்ள இயலாததால் இப்படம் பெரிய வெற்றியைப் பெறவில்லை. ஆனால் இப்படம் வெளிவந்த போது



பெரிய அளவில் எதிர்பார்ப்பு இருந்ததனால் கூட்டம் அலை மோதியது. கூட்டத்தைக் கட்டுப்படுத்த முதன்முதலாக தமிழகத்தில் நீரும் நெருப்பும் திரையிட்ட சென்னை திரையரங்குகளில் குதிரைப் படை பயன்படுத்தப்பட்டது.

உணர்ச்சி குழப்பம் உண்மையா?

விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியில் இரட்டையாகப் பிறந்த குழந்தைகளில் ஒருவர் தொடங்கிய வாக்கியத்தை அடுத்தவர் முடித்து வைப்பது இயற்கை என்கின்றனர். இரட்டையர்களில் ஒருவருக்கு எங்கே ஒரு இடத்திலே ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டாலும் அடுத்தவருக்கும் அதே சமயம் சிறியளவிலாவது ஒரு அசௌகரியம் ஏற்படுகிறது என்பதையும் மருத்துவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இரட்டை குழந்தைகளில் முன்று சதவீதத்தினருக்கு அதிகளவில் உணர்ச்சி குழப்பங்கள் உண்டாகின்றன. ஆனால் நீரும் நெருப்பும் படத்தில் காட்டி இருப்பது போல அதிகக் குழப்பங்கள் ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை. இருவருக்கும் ஒரே மாதிரி விரல் ரேகையும் மரபணுக்கூறுகளும் இருப்பதில்லை. மேலும் இரட்டைக் குழந்தைகள் தாயின் வழியில் தான் தீர்மானமாகின்றனவே தவிர தந்தையின் மரபியல் ரீதியான பங்கு இதில் எதுவும் கிடையாது.

பாசமும் பரிவும்

பொதுவாக இரட்டையர்கள் ஒருவரோடு ஒருவர் மிகுந்த அன்போடும், பாசத்தோடும் இருப்பது வழக்கம். அவர்கள் பிறவியிலிருந்தே நண்பர்களாக மிகுந்த ஒட்டுதலோடு வளர்கிறார்கள்.

ஆங்கிலத்தில் இதனை *family in a family* என்பர். ஒருவருக்கு ஏற்படும் உணர்வுகள் அடுத்தவருக்கும் ஏற்படுவது இயற்கை அதாவது ஒருவர் மனதில் தோன்றும் இன்பமும் துன்பமும் பல மைல் தூரங்களில் வசிக்கும் இன்னொருவருக்குக் கூடத் தெரியவரும். ஆனால் இருவரின் ஆர்வமும், பொழுதுபோக்கும், கல்வி, தொழில் ஆகியன வெவ்வேறாகத்தான் இருந்து வருகின்றன

இரட்டையரின் ஒற்றுமையான உணர்வுகள்

இரட்டையாகப் பிறந்த குழந்தைகள் ஒரே நேரத்தில் வெவ்வேறு இடத்தில் வளர்க்கப்பட்டாலும், ஒரே சமயத்தில் ஆங்காங்கே விபத்துக்களை சந்தித்ததாகவும் தகவல்கள் பதிவாகியுள்ளன. ஒருவர் விபத்தில் தனது கண்களை இழந்த போது மற்றவருக்குக் கண்ணில் வலியும் எரிச்சலும் ஏற்பட்ட சம்பவங்களும் காணப்படுகின்றன. வெவ்வேறு இடங்களில் வளர்ந்து இரட்டைக் குழந்தைகளின் நடத்தை பழக்க வழக்கம் ஆகியவை ஒன்றுபோல இருப்பதையும் விஞ்ஞானிகள் பதிவு செய்துள்ளனர். மிக அபூர்வமாக வெவ்வேறு ஊரில் வளர்ந்து வரும் இரண்டு பெண்கள் ஸ்டீவ் என்ற பெயருடைய வக்கீல்களையே திருமணம் செய்திருந்தனர். இதுவும் ஒரு அபூர்வத் தகவலாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரட்டையர்களுடைய மரபணுக்களில் ஒற்றுமைகள் இருப்பதனால், ஒருவேளை இவர்களின் உடல் மற்றும் மனநிலை ஒரே மாதிரியாக இருக்கலாம் என்றும், இதனால் ஒருவர் தொடங்கும் வாக்கியத்தை மற்றவரால் நிறைவு

செய்ய முடிகிறது என்றும் இங்கிலாந்தில் நடைபெற்ற ஆய்வில் கண்டறிந்துள்ளனர். இவை பொதுவாக இரட்டையர்களுக்கு இருக்கக்கூடிய பண்புகளாகும். இவற்றைச் சற்று மிகைப்படுத்தி நீரும் நெருப்பும் படத்தில் வரும் கரிகாலன் கதாபாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மூலக்கதையான் கார்சிகன் பிரதர்ஸ்

1941 இல் வெளிவந்த கார்சிகன் பிரதர்ஸ் என்ற படம் டக்லஸ் ஃபேர் பேங்கஸ் [Douglas Fairbanks]என்ற ஹாலிவுட் நடிகர் இரட்டை வேடத்தில் நடித்து வசூலில் வெற்றி பெற்ற படமாகும். இதுவே அபூர்வ சகோதரர்கள் என்றும் நீரும் நெருப்பும் என்றும் தமிழில் வந்தது. ஆங்கிலப் படத்தில் டக்லஸ் காதலிக்கும் பெண்ணாக ரூத் வாரிக் என்ற நடிகை நடித்திருந்தார். இந்த நாவல் அலெக்ஸாண்டர் டூமாஸ் Fr. Les Freres Corses என்ற பெயரில் பிரெஞ்சு மொழியில் எழுதிய புகழ் பெற்ற நாவல் ஆகும். இந்நாவல் ஆங்கிலத்தில் The Corsican brothers என்ற பெயரில் மொழிமாற்றம் செய்யப்பட்டது. கார்சிகன் பிரதர்ஸ் படத்தை கிரிகோரி ரேட் ஆஃப் [Gregory Ratoff] என்ற இயக்குனர் இயக்கி இருந்தார். ஜார்ஜ் புருஸ் என்பவர் அதற்கு திரைக்கதை அமைத்திருந்தார். இப்படம் 1941இல் மூன்று மில்லியன் டாலர் வசூல் சாதனை நிகழ்த்தியது.

ஆங்கிலப் படத்தின் கதை

பிரான்சி என்ற சிற்றரசனும் அவனது ராணியும் தங்களுக்குக் குழந்தை பிறந்த நிகழ்ச்சியை அரண்மனையில் கொண்டாடுகின்றனர். அப்போது

அங்கு அவனது எதிரிகள் வந்து இருவரையும் கொன்று விடுகின்றனர். இதனால் ஒரு மருத்துவர் இரட்டைக் குழந்தைகளை எடுத்துக்கொண்டு தன்னுடைய வீட்டிற்கு வந்துவிடுகிறார். அங்கு இருவரையும் அறுவை சிகிச்சை மூலம் பிரிக்கின்றார். இருவரில் மூத்தவனான மரியோ இசபெல்லா என்ற பெருங்குடிப் பெண்ணை வில்லனிடம் இருந்து காப்பாற்றுவதால் இருவர் இடையே காதல் மலர்கிறது. இவர்கள் காதல் உணர்வை அனுபவிக்கும்போது இவனது தம்பி லூசியனும் அதே உணர்வை அனுபவிக்கிறான். தந்தையைக் கொன்றவர்களை கொன்று பழி தீர்க்க வேண்டும் என்று கொள்கையில் இருந்தவன் இப்போது தனக்கு இத்தகைய உணர்ச்சி குழப்பங்களை ஏற்படுத்தும் மரியோவே தன முதல் எதிரி என்று முடிவு செய்து அவனை கொல்லத் துணிகிறான். இருவருக்கும் இடையே குத்து வாள் சண்டை நடைபெறுகிறது.

குத்து வாள் சண்டை

நீரும் நெருப்பும் படத்துக்காக குத்து வாள் சண்டை காட்சி சத்யா ஸ்டுடியோவில் படமாக்கப்பட்ட போது இந்தித் திரையுலகைச் சேர்ந்த பிரபலங்களான தர்மேந்திராவும் ஹேமா மாலினியும் அந்த ஸ்டுடியோவுக்கு வருகை தந்தனர். எம்.ஜி.ஆர். உண்மையான குத்து வாளை வைத்துச் சண்டை செய்வதைப் பார்த்து வியந்து போகின்றனர்.

குத்து வாள் சண்டைக் காட்சி ஆங்கிலப் படத்தில் மிகப் பிரமாதமாக எடுக்கப்பட்டிருந்தது. பிறகு மரியோ வில்லனிடம் சிக்கிய இசபெல்லாவை காப்பாற்றுவதற்காக ஒரு நகை

வியாபாரி போல மாறுவேடம் போட்டுக் கொண்டு செல்கிறான். அவளை மீட்டுக் கொண்டு வந்துவிடுகிறான். மருத்துவர் ஒரு மருந்தைக் கொடுத்து மரியோ இறந்துவிட்டதாக வில்லனை நம்பவைத்து அவனிடமிருந்து மரியோவைக் காப்பாற்றுகிறார். லூசியன் தன் தந்தையைக் கொன்ற வில்லனுடன் போர் புரிகின்றான். அவன் சோர்வடைந்து விழும் நேரத்தில் மரியோ மயக்கத்திலிருந்து விடுபட்டு வில்லனோடு சண்டையிட்டு அவனைக் கொல்கிறான். இறந்து போகும் தருணத்தில் இருக்கும் லூசியன் தன்னுடைய சகோதரனிடம் தன் தவறுக்காக மன்னிப்பு கேட்கிறான். இக்கதை எந்த மாற்றமும் செய்யப்படாமல் தமிழில் வெளிவந்தது.



நீரும் நெருப்பும் படத்தில் ஒவ்வொரு காட்சியையும் எம்.ஜி.ஆர். ரசித்து செய்திருந்தார். டக்ளசும் எறால் ஃபிளையினும் எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்தமான ஹிரோக்கள் என்பதால் டக்லஸ் நடித்த இப்படத்தை அவர் மிகவும் ரசித்தார். கடைசி காட்சியில் ஒருவர் வலது கையிலும் அடுத்தவர் இடது கையிலுமாக வாளைச் சுழற்றி சண்டை செய்வதாகக் எடுத்திருந்தார். இது பற்றி எம்.ஜி.ஆரிடம் கேட்ட போது 'நான் மாயா மச்சிந்திரா [1939] படத்திலேயே இடது கையால் வாளைச் சுழற்றி சண்டை செய்திருக்கிறேன்' என்றார்.

1939 இல் கார்சிகன் பிரதர்ஸ் வெளிவந்த போது டக்லஸ் 'இந்தப் படத்தில் இறுதியில் காட்டப்படும் வாள் சண்டை மிகப் பிரமாதமாக இருக்கும் மற்றபடி இந்த படத்தைப்பற்றி சிறப்பாக சொல்வதற்கு எதுவும் இல்லை' என்று சொல்லிவிட்டார். இப்படம் அவர் எதிர்பார்த்திராத அதிக வசூலைக் குவித்த பிறகு 'நான் இந்த பணத்தை கொண்டு சி பி எஸ் என்ற ஒளிபரப்பு நிறுவனத்தையே விலைக்கு வாங்கியிருக்க முடியும் . எனவே இந்தப் படம் என்னுடைய பிரியமான படங்களில் ஒன்றாகிவிட்டது' என்று தெரிவித்தார்.

நீராக மணிவண்ணன்

மணிவண்ணனாக சிறுவர்களுக்கு வீர விளையாட்டுகளைக் கற்பிக்கும் இளைஞராக அறிமுகமாவார். முதல் காட்சியில்

"கடவுள் வாழ்த்து பாடும் இளம்

காலை நேரக் காற்று

கைகள் வணக்கம் சொல்லும் இளம்

கதிரவனைப் பார்த்து"

என்ற பாடலோடு தொடங்குகிறது. இப்படம் எடுக்கும்போது அவர் திராவிட முன்னேற்றக் கழக கட்சியில் இருந்ததனால் அக் கட்சியின் சின்னமான உதயசூரியனை இப் பாட்டில் யில் இளம் கதிரவன் என்ற சொல்லால் சுட்டிச் செல்கிறார். இப்பாடலில் முறையாக வீர விளையாட்டுகளில் பயிற்சி பெற்ற சிறுவர்கள் செய்து காட்டும் வீர விளையாட்டுக் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

மணிவண்ணன் சிறுவர்களின் விர விளையாட்டுகளுக்கு நடுவே லாவகமாக நடந்து வருவதும் கைகளில் இரண்டு கத்திகளை கொண்டு சுழற்றியபடி ஒரு பாடலைப் பாடுவதும் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்த காட்சி ஆகும். ஸ்டண்ட் இயக்குனராக உயர்ந்த ராஜ்குமார் சிறு குழந்தையாக இப்படத்தில் எம்.ஜி.ஆருடன் நடித்திருப்பார். அச்சிறுவனுடன் எம்.ஜி.ஆர். சண்டை போடும் காட்சி மிக மென்மையாகவும் இரசனைக்கு உரியதாகவும் எடுக்கப்பட்டிருக்கும்.



நெருப்பாக கரிகாலன்

தம்பி கரிகாலன் தன் காதலியின் மீது நாட்டம் கொள்கிறான் என்பதை மணிவண்ணன் அறிந்ததும், தன் காதலியிடம் அதைப்பற்றி எதுவும் கடுமையாக பேசாமல் எச்சரிக்கை செய்து விலக்கிவிடுவது தம்பியின் மீது கொண்டிருந்த இரட்டையர் பாசத்தை உறுதி செய்வதாக உள்ளது. இரட்டையராகப் பிறக்கும் குழந்தைகள் ஃபேமிலி வித் இன் அ ஃபேமிலி என்ற சொற்றொடருக்கு ஏற்ப அவர்கள் குடும்பத்துக்குள்ளேயே ஒரு தனிக் குடும்பமாக இருந்து அன்பு பாராட்டுகின்றனர்.

நிறைவு

இரட்டையரில் வித்தியாசம் தெரிவதற்காக கரிகாலனைக் கருப்பு எம்.ஜி.ஆராகக் காட்டியிருப்பார்கள். அந்த எம்.ஜி.ஆர். காதல் உணர்வால் தவிக்கும் காட்சிகளில் அவரின் நடிப்பு அருமையாக இருந்தாலும் அதை இரசிகர்களால் ரசிக்க இயலவில்லை. இன்னொருவனின் காதலியை எம்.ஜி.ஆர். காதலிப்பதை அவரே இரட்டை வேடம் போட்டிருந்தாலும் கூட மக்கள் விரும்புவதில்லை என்பதற்கு ஆசை முகம் மற்றும் நீரும் நெருப்பும் படங்கள் சான்றாகும்.

5. எம்.ஜி.ஆர். படத்தில் யோகா

எம்.ஜி.ஆர். சமயம் சார்ந்த மூட நம்பிக்கைகளை ஒழிக்கும் வகையில் கருத்துக்களை பரப்பி பகுத்தறிவு சார்ந்த கதைகளைத் தேர்ந்தெடுத்து நடித்து வந்தார். அவர் படங்களில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இடம் பெறுவதைப் போல மெய்ஞ்ஞானமும் ஒரு படத்தில் இடம்பெற்றுள்ளது. தலைவன் என்ற படத்தின் தொடக்கத்தில் எம்.ஜி.ஆர். ஹடயோகியாகத் தோன்றுவார். யோகப் பயிற்சியை இன்று பலரும் அறிவியல் ரீதியாக ஏற்றுக்கொண்டதனால் ஜூன் மாதம் 21 ஆம் நாளை ஐக்கிய நாடுகள் சபை உலக யோகா தினமாக அறிவித்தது. தர்போது இந்நாள் அமெரிக்கா முதல் ஆப்பிரிக்கா வரை யோகா தினமாகக் கருதப்படுகிறது.

தாமஸ் பிக்சர்சார் தயாரித்த தலைவன் படம் 1970இல் திரைக்கு வந்தது. இப்படத்தில் ஒரு சிற்றரசின் இளவரசரான எம்.ஜி.ஆர். இலண்டனில் சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற ரகசியப்

போலீசாராக நடித்தார். இப்படத்தை தயாரிப்பாளரான பி. ஏ. தாமசும் சிங்கமுத்துவும் இயக்கினர். அவருடைய தந்தையார் இந்திய மருத்துவத்தில் நிபுணராக இருக்கின்றார். நம்முடைய இந்திய நாட்டு மருத்துவத்தில் உள்ள சிறப்புகளை அவர் தன மகனுக்கு எடுத்துச் சொல்லும் காட்சிகள் உண்டு. படம் தொடங்கும் முன்பே,

சித்த மருத்துவம் பற்றி விளக்கிக் கூறி மூலிகைகள் தந்து, உடனிருந்து உதவிய ஒய்வு பெற்ற மசவட்ட நீதிபதி உயர் திரு வி பலராமையா அவர்களுக்கு எங்கள் இதயங்கனிந்த நன்றி'

என்ற அறிவிப்பு ஒன்று காட்டப்படும் அதன் பிறகு

'ஹடயோக சித்தி கைவரப்பெற்றவர் நீரிலே நடக்கலாம் நெருப்பிலே படுக்கலாம் உடலைப் பஞ்சைப் போல இலேசாக்கி காற்றிலே பறக்கலாம்

ஆதாரம்

பதஞ்சலி முனிவர் எழுதிய யோக சித்தாந்தங்கள். *[yoga aphorisms]*

மொழிபெயர்ப்பு சுவாமி விவேகானந்தர்'

என்ற வரிகள் காட்டப்பட்டு அதுவே ஒலிப்பதிவாகவும் ஒலிக்கப்படும் பெயர் போடும்போது மண்டையோடு மற்றும் எலும்புக் கூடுகளின் படம் காட்டப்பட்டு இப்படம் ஏதோ அமானுஷய்ம் பற்றிய படம் போன்ற தோற்றம் உருவாக்கப்படும்.

ஸ்காட்லேண்டு யார்டுக்குப் போய் சிறப்பு பயிற்சி பெற்றுத் திரும்பும் போலீசாராக எம்.ஜி.ஆர். நடித்தார். இலண்டனில் எம்.ஜி.ஆர். அமர்ந்த நிலையில் தண்ணீர் நிரம்பிய நீச்சல் குளத்தில் 45 நிமிடம் மூழ்கியிருப்பார். பின்பு நீந்தி மேலே வருவார். அப்போது அவரது சாதனையை ரெக்கார்டு பிரேக் என்று உதவியாளர் கூறவும் எம்.ஜி.ஆர். 'ஹடயோக சக்தியால் நாற்பத்தஞ்சு நிமிஷம் மட்டுமால் நாற்பத்தஞ்சு மணி நேரம் ஆனாலும் சுகமா தண்ணீக்குள்ளேயே இருக்கலாம்' என்பார். இது ஹடயோகத்தின் சிறப்பை எடுத்துக் சொல்லும் வசனம் ஆகும்.

"ஒவ்வொரு மனித உடம்பிலேயும் உன்னதமான சக்திகள் அடங்கியிருக்கு பெருக்கி எடுத்தொடும் வெள்ளத்தை தடுத்து அணை கட்டி மின்சாரத்தை உற்பத்தி பண்றோமில்ல, அது போல மனித உடம்பில இருந்து வெள்ளம் போல வெளியே போகுதே மூச்சு அத ஹடயோக முறைப்படி அடக்கி



அதுல இருந்து பெறக் கூடிய சக்தி தான் ஹடயோக சக்தி'' என்பார்.

'அந்த ஹடயோக சக்தியை அடைஞ்சிட்டா' என்று உதவியாளர் கெட்ட கேள்விக்கு எம்.ஜி.ஆர். 'நீர் மேல் நடக்கலாம் நெருப்பிலே படுக்கலாம் காற்றிலே பறக்கலாம் என்பார்

'சார் சார் சார் எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு. நீங்க பறந்து காட்டுங்க நான் பார்க்கணும்' என்று உதவியாளர் கேட்கவும் எம்.ஜி.ஆர். 'இப்பவா?' என்று கேட்டுவிட்டு அமர்ந்த நிலையில் இருந்த எம்.ஜி.ஆர். உயரே எழும்பி பின்பு கீழே

இறங்கி வருவார். இத்துடன் ஹடயோக காட்சிகள் நிறைவு பெறும்.

தலைவன் படத்தில் ஹடயோகம் தவிர சித்த மருத்துவம் முலிகை வைத்தியம் குறித்த தகவல்களும் இப்படத்தில் இடம்பெற்றன. ஜி



சகுந்தளாவின் காயத்துக்கு பச்சிலைச் சாறு விடுவதால் காயம் உடனடியாக மறைந்து சுகமாகும் காட்சியும் காட்டப்படுகின்றது.

யோகா – விளக்கம்

இந்தியாவில் பதஞ்சலி முனிவரால் தோற்றுவிக்கப்பட்ட யோகக் கலையில் மந்திர யோகம், லய யோகம், ஹடயோகம், ராஜயோகம் என்று நான்கு யோக வகைகளுண்டு யோகம் என்பது உடலையும் உள்ளத்தையும் இணைக்கும் ஆரோக்கிய பயிற்சி ஆகும். யோகம் என்றால் இணைப்பு என்பது அர்த்தம்.

ஹட யோகம்

யோகப் பயிற்சியை சரீரம் மன சாஸ்திரங்கள் உடைய ஒரு சம்பூரண ஞானக்களஞ்சியம் ஆகும் என்பர். வயலினில் கம்பியை முறுக்கேற்றி நல்ல இசையை பெறுவது போல உடலுக்கு பயிற்சி அளித்து நல்ல பலனைப் பெறுவது ஹட



யோகமாகும். ஹா என்றால் இட கலையில் ஓடும் சுவாசம். ட என்றால் வடகலையில் கலையில் ஓடும் சுவாசம். பிராணாயாமத்தால் ஜடராக்கினியுடன் சேர்த்து மூலாதார தாமரையில் உறங்கிக் கிடக்கும் குண்டலினியைத் தட்டி எழுப்பி முதுகெலும்பில் இருக்கும் சுழுமுனை என்ற துவாரத்தின் வழியாக உச்சிக் கமலத்தில் இருக்கும் பிரம்மாண்ட வாசலில் நிலைநிறுத்த வேண்டும். இவ்வாறு நிறுத்தியதும் மனம் அடங்கி உள்மனம் திறக்கும் நிலையைப் பெறலாம். ஞானம் சித்திக்கும். இதுவே யோகப் பயிற்சியின் வெற்றி நிலை.

தண்ணீர் மீது அமர்ந்து தியானம் செய்யும் அதிசய மனிதர் பற்றி நமக்கு தகவல்கள் கிடைக்கின்றன என்பதால் தலைவன் படத்தில் எம்.ஜி.ஆர். செய்த ஹடயோகம் உண்மையானது என்பதை உணரலாம் ஆனால் படம் வந்த காலத்தில் யோகா பற்றிய அறிவு பரவாத காரணத்தால் இக்காட்சிகளை மக்கள் நமபவில்லை. . வாசி யோகம் என்ற மூச்சுப் பயிற்சியால் இது சாத்தியம் என்பதை மக்கள் மூட நம்பிக்கை என்று நம்பினர். இராண்டாண்டுகளுக்கு முன்பு வந்த புதிய பூமியில் எம்.ஜி.ஆர். நாட்டு வைத்தியத்தை நம்பக் கூடாது என்று காட்டிய காட்சிகள் மக்கள் மனதில் ஆழப் பதிந்திருந்தன. 1971இல் எம்.ஜி.ஆர். இந்திய நாட்டு வைத்தியம் மகத்தானது என்று தெரிவித்த போது படம் பார்த்தவர்கள் குழம்பி போய் மீண்டும் மீண்டும் இப்படத்துக்கு வராமல் [repeated audience] இருந்துவிட்டனர்.

நீரில் அமர்ந்து தியானம் செய்தல்

சதுர கிரி மலையில் சங்கிலிப் பாறை அருகே தண்ணீரின் மீது அமர்ந்து ஒரு அம்மா தியானம் செய்வதை நேரில் கண்டு புகைப்படம் எடுத்ததை ஒருவர் தன்னுடைய முகநூலில் பகிர்ந்தார்.. அந்த புகைப் படத்தையும் வெளியிட்டார்.

திருச்சியில் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற வேண்டி இருபது பள்ளி மாணவ மாணவியர் தண்ணீரின் மீது அம்ர்ந்து யோகா செய்தனர். இதனைப் படம் எடுத்து வெளியிட்ட ஊடகங்களா யோகா குருவிடம் பேட்டியும் எடுத்து வெளியிட்டன. 'தண்ணீரில் அமர்ந்து யோகம் செய்யும் போது உடல் லேசாகும்' என்று யோகா குரு தெரிவித்தார். இந்நிகழ்ச்சி 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் நாள் திருச்சியில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியை ஜெயா நியூஸ் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

அஷ்ட சித்திகளில் ஒன்றான லகிமா

தண்ணீரிலிருந்து மேலே எழும்பி வருவது அட்ட சித்திகளில் ஒன்றான லகிமா சித்தி ஆகும். அட்டமாசித்திகள் என்பன அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், வசித்துவம், ஈசத்துவம் ஆகியனவாம். அணிமா என்பது உடலை அணுவளவு சுருக்குவதாகும் , அனுமன் இதனை இலங்கையில் செய்து காட்டியிருக்கிறான். லகிமா என்பது உடலை லேசாக்கி பறப்பதாகும். அப்பரைக் கல்லைக் கட்டி கடலுக்குள் போட்டபோது அவர் கல்லை மிதவையாக்கி மேலே மிதந்து வந்தார். மகிமா என்பது உருவைப் பெரிதாக்கும் முறை. மூன்று அடி

உயர்த்தில் தோன்றிய வாமனன் திடிரென உலகளந்த பெருமாளாக வளர்ந்தது இந்த சித்தியினால் ஆகும். கரிமா என்பது ஒரு பொருளையோ உடலையோ கனமானதாக மாற்றுவதாகும். அனுமன் தனது வாலின் கனத்தை அதிகரித்ததால் பீமன் அதனைத் தூக்க இயலாமல் சிரமப்பட்டான். இது அனுமனின் கரிமா சித்தி ஆகும். . வசித்துவம் என்பது வசியம் செய்யும் சக்தி ஆகும். அப்பர் தன்னைக் கொல்ல வந்த யானையை நிறுத்திய செயல் சான்று ஆகும். பிராத்தி என்பது ஒரே நேரத்தில் பல இடங்களில் சஞ்சாரம் செய்வது ஆகும். கண்ணன் ஒரே நேரத்தில் கோபியர் பலரோடும் காட்சி தருவதாகும்.. ஈசத்துவம் என்பது ஐந்தொழிலையும் ஒருவன் செய்து காட்டுகின்ற சித்தியாகும். இவற்றுள் லகிமா என்பது தான் தலைவன் என்ற படத்தில் எம்.ஜி.ஆர். செய்து காட்டும் பயிற்சி ஆகும்.

ஆங்கில மருத்துவத்தை நம்பத் தொடங்கிய மக்கள் மீண்டும் அக்கருத்தை மாற்றிக்கொண்டு இந்திய மருத்துவத்தை நம்ப தயாராக இல்லை. எனவே இப்படத்தில் இவர் இந்திய மருத்துவம், யோகப் பயிற்சி முறைகள் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்து காட்டியும் கூட படம் சுமாரான வெற்றியைத்தான் பெற்றது.

6. மந்திரஜாலத்துக்குப் பதிலாக அறிவியல் செயற்பாடு

எம்.ஜி.ஆர். படங்களில் கலையரசி, ஆசைமுகம், உலகம் சுற்றும் வாலிபன் போன்றவற்றின் முழுக் கதையும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்ததாக விளங்கின. தலைவன் என்ற படம். ஹட யோகப் பயிற்சியைக் காட்டியது. வேறு சில படங்களில் எம்.ஜி.ஆர். கதைப்படி மந்திரஜாலமாக இருக்க வேண்டிய காட்சிகளை மாற்றி அமைத்து அவற்றை அறிவியல் பூர்வமானதாகக் காட்டினார்.

அலிபாபாவும் 40 திருடர்களும்

அலிபாபாவும் 40 திருடர்களும் என்ற கதை ஆயிரத்தொரு அரபு கதைகல் என்ற தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டதாகும். எம்.ஜி.ஆர். நடித்த குலேபகாவலியும் இத்தொகுப்பைச் சேர்ந்ததே ஆகும். அலிபாபாவும் 40 திருடர்களும் கதையில் மந்திரஜாலம் உண்டு. நாற்பது திருடர்கள் ஊருக்கு வெளியே ஒரு காட்டுப்பகுதியில் ஒரு குகையில் தங்கி இருந்தனர். இவர்கள் தாம் கொள்ளையடித்த பொருட்களை அங்கே ஒளித்து வைத்தனர். அந்த

குகைக்கு ஒரு ஆவி காவல் இருந்தது. திருடர்கள் வசித்த இக்குகையைத் திறப்பதற்கு ஒரு மந்திரத்தைச் சியோல்ல வேண்டும். அந்த மந்திரத்தைச் சொன்னால் மட்டுமே ஆவி தனது குகையைத் திறந்து அந்த திருடர்கள் உள்ளே வர வழிவிடும்.

மந்திர வாசகம்

குகையைத் திறக்கவும் திரும்ப மூடவும் மந்திரங்கள் தான் திறவுகோலாக அரபுக் கதையில் காட்டப்பட்டன. எம்.ஜி.ஆர். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர். அவருக்கு மந்திர மாயங்களில் நம்பிக்கை கிடையாது. தனது படம் பார்க்கும் மக்களையும் அவர் மந்திர மாயங்களை நமபாதீர்கள், அறிவியல் பூர்வமான பகுத்தறிவு சார்ந்த விஷயங்களையே நம்புங்கள் என்று கற்பித்து வந்தார். இந்நிலையில் அவர் எப்படி தன படத்தில் மந்திர மொழியைப் பயன்படுத்த இயலும் எனவே அவர் அதனை மாற்றி அமைக்கும்படி கட்டளையிட்டார்.



கதைப்படி 'அண்டா காகசம் அபு காகுஸம் திறந்திடு சீசேம்' என்று சொல்லவேண்டும். இந்த மந்திர உச்சாடனம் கேட்டதும் அந்த கதவு திறக்கப்படும். இதை மாற்ற இயலாது ஆனால் ஆவி செய்துவந்த செயலை மனிதர் செய்வதாக மாற்றி அமைக்கலாம் அல்லவா? எம்.ஜி.ஆர். தன் படங்களின் மூலமாக இவ்வாறு பகுத்தறிவுப் பிரச்சாரமும் செய்து வந்தார்.

திரைப்படங்களில் மூட நம்பிக்கை ஒழிப்பு

திமுகவினர் பேரறிஞர் அண்ணாவிடம் 'எம்.ஜி.ஆர். ஒரு நடிகர். அவரை இவ்வளவு ஆதரித்து அன்பு பாராட்டுகிறீர்கள் அது ஏன்? என்று கேட்ட போது 'நாம் மேடையில் பேசி செய்யும் பிரச்சாரம் அதிக பட்சமாக ஐயாயிரம் பேரைச் சென்றடையும். ஆனால் எம்.ஜி.ஆர். தன படங்களின் மூலமாக செய்யும் பகுத்தறிவுப் பிரச்சாரம் ஐந்து இலட்சம் பேரைச் சென்றடையும்' என்றார். சினிமாவை வலிமையான பிரச்சாரக் கருவியாக பயன்படுத்தி வந்த எம்.ஜி.ஆரின் ஆற்றலைக் கண்டு அண்ணா வியந்துபோனார்.



தனது படங்களில் மந்திர தந்திரம் போன்றவற்றிற்கு இடம் அளிக்க விரும்பாத எம்.ஜி.ஆர். திருடர்களின் குகை திறக்கும் காட்சியை மந்திர வித்தையாகக் காட்டாமல் மனிதச் செயற்பாடாகக் காட்டினார். திருடர்கள் 'அண்டா காகசம் அபு காகுஸம் திறந்திடு சீசேம்' என்று சொன்னதும் குகையின் வாயிலை அடைத்திருக்கும் பாறை மனித முயற்சியால் நகர்த்தப்படுவதாகக் காட்டினார். அந்தப் பாறையோடு இணைத்துக் கட்டப்பட்ட ஒரு சங்கிலி ஒரு சக்கரத்தில் சுற்றப்பட்டிருக்கும். திருடர்களிடம் சிக்கி அர்டிமையான சிலரை கொண்டு அந்த சக்கரம் சுற்றப்படும் இவர்கள் குகையின் கதவு திறக்கும் நிகழ்ச்சிக்குக் காரணமாக இருப்பார்கள். மந்திர ஒலியைக் கேட்டதும் அடிமைகள் சக்கரத்தைச் சுற்றுவர. அப்போது சங்கிலியால் கட்டப்பட்ட பாறை மெல்ல மெல்ல நகர்ந்து வழிவிடும். திருடர்கள் உள்ளே போகலாம்.

திருடர்கள் குகைக்குள் போனதும் இதே மந்திரத்தைச் சொல்லி 'மூடிடு சிசேம்' என்பார்கள். அந்த அடிமைகள் அனைவரும் மீண்டும் சக்கரத்தை எதிர்ப்புறமாக சுற்றுவார்கள். இது எல்லோராலும்



நம்பக் கூடியதாக இருந்தது. இக்காட்சிக்கு நல்ல வரவேற்பும் அக்காலத்தில் இருந்தது.

சந்திர மண்டலப் பயணம்

எங்கள் தங்கம் படத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தியர்கள் சந்திர மண்டலத்திற்கு இராக்கெட்டில் போய் இறங்க முயற்சிகள் செய்வதாக ஒரு நகைச்சுவை கதாகாலட்சேப காட்சியை சந்திர மண்டல விஜயம் என்ற பெயரில் நிகழ்த்தி காட்டியிருப்பார். பகுத்தறிவு பகையே என்ற முதல் வாசகத்துடன் தொங்குவார். அமெரிக்காவில் ஜூலை மாதம் 21 அன்று அமெரிக்காவில் இருந்து ராக்கெட் அனுப்பியதை முதலில் சொல்லித் தொடங்குவார். இங்குள்ள ஜோதிடப் பாரம்பரிய நம்பிக்கையின் படி அமாவாசை அன்று நிலவு வராது இதை மையமாக



வைத்து இந்தியாவிலிருந்து ராக்கெட் புறப்பட்ட நன்னாள் அன்று அமாவாசை என்பதால் அன்று நிலவு இருக்காது அதனால் நிலவில் போய் இறங்க இயலாது. அந்தப் பயணம் தற்காலிகமாக கைவிடப்பட்டது. இன்னும் பதினைஞ்சு வருஷத்துக்கு இப்பயணத்தை ஒத்தி வைக்கிறேன் என்று அதிகாரி சொல்வதாக எம்.ஜி.ஆர். சொல்லி ஒரு நம்பிக்கை வார்த்தையோடு கதாகாலட்சேப நிகழ்ச்சியை நிறைவு செய்திருப்பார்.

சந்திராயன் 1 & 2

சந்திரனில் ஆராய்ச்சி செய்வதற்காக இந்தியா சந்திராயன் 1 மற்றும் 2 என்று வரிசையாக விண்கலங்களை அனுப்பி வருகிறது. எங்கள் தங்கம் படத்தின் கதாகாலட்சேபம் நடந்து ஐம்பது ஆண்டுகள் கழித்து இந்தியா சந்திரனுக்கு விண்கலத்தை வெற்றிகரமாக அனுப்பியுள்ளது. அமெரிக்காவைப் போல ஆட்களை அனுப்பாமல் ஆளில்லா விண்கலத்தை இந்தியா அனுப்பியுள்ளது. 2008 இல் இவ்வாறு ஆளில்லாத விண்கலத்தை அனுப்பும் நிகழ்வு தொடங்கியது. இத்திட்டத்தின் தலைவராக மயில்சாமி அண்ணாத்துரை என்ற தமிழர் பொறுபேற்றார். இரண்டாவது சந்திராயன் விண்கலம் அனுப்பும் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஜுலை 22 அன்று நிறைவேறியது.

சொல் செயலாயிற்று

இந்தியாவில் இருந்து தற்போது சந்திர மண்டலத்தை நோக்கி அனுப்பிய விண்கலங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. எம்.ஜி.ஆர். சொன்ன வாக்கு இன்றைக்குப் பலித்துவிட்டது. இது ஒரு

வேடிக்கை நிகழ்ச்சியாக இருந்தாலும் கூட இங்கு உள்ள வேடிக்கையான பல விஷயங்கள் கதாகாலட்சேபத்தில் நகைச்சுவைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தன.

'அறிவியல் கருவிகள், ராக்கெட்டு, ஸ்பேஸ் உடைகள், டெலிவிஷன் போன்றவற்றை அமெரிக்காவும்' 'வெற்றிலை, பாக்கு, பூ, பழம், சூடம், பந்தல். மேடை மைக் அரேன்ஜெமெண்ட்டு போன்ற அதி முக்கியமான 'வெரி இம்பார்ட்டண்ட்டான' விஷயங்களை இந்தியாவும் பொறுப்பேற்றுக் கொள்ளும்' என்று எம்.ஜி.ஆர். மேடையில் நடித்துக் காட்டிய பணிப் பங்கீடு நகைச்சுவையாகத் தோன்றியது. ஆனால் இன்று இந்தியாவே அனைத்தையும் தயாரித்து சந்திரனுக்கு விண் கலத்தை அனுப்பியிருப்பது பாராட்டுக்குரியது ஆகும். ஆனால் கதாகாலட்சேப நிறைவில் சந்திர மண்டலத்திற்கு ராக்கெட் அனுப்புவோம் என்று எம்.ஜி.ஆர். சொன்ன சொல் உண்மையாயிற்று.

மர்மயோகியில் ஆவியின் செயல்பாடு

1951 இல் வெளியான மர்மயோகி திரைப்படம் சிறுவர்கள் பார்க்கக் கூடாது அது அவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் என்பதால் 18 வயதினருக்கு மேல் இருப்பவர்கள் மட்டுமே பார்க்க வேண்டும் என்று தணிக்கை குழுவினரால் ஏ சான்றிதழ் வழங்கப்பட்ட படம் ஆகும். இப்படத்தில் இறந்து போன ஒருவரின் ஆவி வந்து தன்னைக் கொன்றுஅவளை அச்சுறுத்தும் அவள் பயந்து அலறி நடுங்குவாள். இக்காட்சியை சிறுவர்கள் கண்டால் பயந்துவிடுவார்கள் என்பதால் ஏ சான்றிதழ் வழங்கப்பட்டது. எம்.ஜி.ஆர். ஆவி பேய் பிசாசு



போன்றவற்றை நம்பக் கூடாது என்று பிரச்சாரம் செய்யும் திமுகவைச் சேர்ந்தவர் என்பதால் கொல்லப்பட்டவரின் ஆவி வந்து பழி வாங்கும் காட்சிகள் அறிவுக்கு உகந்தவையாக மாற்றப்பட்டிருந்தன.

கே ராம்நாத் இயக்கிய மர்மயோகி படத்தில் மன்னனாக செருகளத்தூர் சர்மா நடித்திருந்தார். இப்படத்தின் படத் தொகுப்பு பொறுப்பை சாண்டோ சின்னப்பா தேவரின் தம்பி எம் எ திருமுகம் ஏற்றிருந்தார். இவரே பின்னர் தேவரின் வெற்றிப் படங்கள் பலவற்றை இயக்கினார். ஆவியின் அச்சுறுத்தல் பற்றிய காட்சிகளை திருமுகம் சிறப்பாக தொகுத்திருந்தார். படம் தொடங்கும் பொது மணி பன்னிரெண்டு அடிக்கும். ஜூபிடர் பிக்சர்ஸ் சின்னம் காட்டப்பட்டு தொடர்ந்து பெயர்கள் போடப்படும்.

மனைவியை இழந்த மன்னனை ஏமாற்றித் திருமணம் செய்துகொண்ட நாடோடி

நடனக்காரியான அரசி அவரைப் படகுப் பயணத்துக்கு அழைத்துச் சென்று அங்குத் தண்ணீரில் தள்ளிவிட்டுக் கொன்றுவிடுகிறாள். பின்பு தானே அரியணையில் அமர்கிறாள். இதன் பின்னர் ஒரு யோகி அந்த அரண்மனைக்கு வந்து ராணியின் நம்பிக்கைக்குரிய ஆலோசகராக மாறுகிறார். இவரே மர்ம யோகி. இவர் பெயர் தான் படத்துக்குச் சூட்டப்பட்டுள்ள்ளது. இவர் யார் என்ற ரகசியத்தை விடுவிப்பவன் தான் படத்தின் நாயகனான மக்கள் நண்பன் கரிகாலன். ராணி கொடுங்கோல் ஆட்சி நடத்துகிறாள். மக்களின் கண்ணீரைத் துடைப்பவனாக கரிகாலன் வருகிறான்.

அரண்மனையில் ஆவியின் நடமாட்டம்

பேய் பிசாசு போன்றவற்றில் நம்பிக்கை இல்லாத திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எம்.ஜி.ஆர். இக்காட்சியை மாற்றி வைக்க விரும்பினார். ஆற்றில் தள்ளி கொல்லப்பட்ட மன்னன் உயிர் பிழைத்து யோகியாக மாறுவேடத்தில் அரண்மனைக்கே திரும்ப வந்து சேர்கிறார். ஆவியாக



வந்து இரவு நேரங்களில் ராணியை அச்சுறுத்தி அவளுக்கு ஒரு நிம்மதி இல்லாத நிலையை ஏற்படுத்துகிறார். ஆவி இரவு நேரங்களில் படுக்கை அறைக்கு வந்து அவளை அச்சுறுத்தித் துரத்துவதாகக் காட்சிகள் அமைக்கப்பட்டன. ஒரு காட்சியில் மட்டும் ஒரு இடத்திற்கு வந்து நின்ற அந்த ஆவி தான் உடுத்தியிருந்த உடுப்பைக் களைந்து விட்டு ஒரு ஜிப்பாவை அணிவதாக நிழலில் காட்டப்படும். பின்பு தாடி வைத்திருக்கும் முதியவரான யோகி தான் அந்த இடத்தில் இருந்து வெளியே வருகிறார். இவர்தான் ஆவியாக வந்து ராணியை அச்சுறுத்துகிறார் என்பது புரிந்து கொள்ள ஏதுவாக இக்காட்சி அமைந்திருந்தது. ஆக ஆவி, பேய், பிசாசு என்பதெல்லாம் பொய்; மனிதனே ஆவியைப் போல நடித்து அச்சுறுத்துகிறான் என்ற காட்சி இப்படத்தில் வைக்கப்பட்டதால் இப்படம் பேய் பிசாசு பற்றிய மூட நம்பிக்கையை வளர்க்கும் படமாக அமையவில்லை.



கண்ணால் காண்பதும் போய்

காதால் கேட்பதும் போய்

தீர விசாரிப்பதே மெய்

என்ற கருத்தின் படி ஆவியின் செயல்பாட்டை கண்டு நம்பிவிடக் கூடாது. அதன் உண்மை என்ன என்பதை அறிந்து முடிவு செய்ய வேண்டும் என்ற பகுத்தறிவுக் கருத்தை எம்.ஜி.ஆர். அரண்மனையில் ஆவியின் நடமாட்டம் மூலமாக வலியுறுத்தினார்.

ஆவி மனிதன் ஆயிற்று

அரண்மனையில் ராணிக்கு ஆலோசகராக விளங்கிய யோகியே இரவு நேரங்களில் வந்து ராணியை அச்சுறுத்தும் ஆவியாகவும் வருகிறார். என்பது மக்களுக்கும் புரிந்துவிட்டது ஆனால் ராணி தான் செய்த கொலைக்கு எப்படி தண்டனை பெறுவாள் என்ற ரசிகர்களின் ஆவலில் படம் இனித் தொடர்கிறது. இப்படத்தில் பேய் பிசாசு பற்றிய விஷயங்களுக்கு உரிய காரணங்களை கற்பித்து அது காரணத்தோடுதான் நடக்கின்றது. தவிர அவற்றில் அமானுஷ்யமான விஷயங்கள் எதுவும் இல்லை என்று காட்டப்பட்ட போது இரசிகர்கள் அதனை மிகவும் ஏற்றுக்கொண்டனர். திரும்பத் திரும்ப இப்படத்தை ஆவலோடு வந்து பார்த்து அதனை வெற்றி பெறச் செய்தனர். எம்.ஜி.ஆர். படங்களில் இடம்பெற்ற பகுத்தறிவு சார்ந்த விஷயங்கள் இளைஞரின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன. இவை வெற்றிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

எம்.ஜி.ஆர். தனது படங்களில் மூட நம்பிக்கை சார்ந்த காட்சிகள் இடம்பெறாமல் கவனித்துக்கொண்டார். அவ்வாறு இடம் பெற வேண்டியவற்றை அறிவியல் சார்ந்தவையாக மாற்றி அமைத்தார். இதனால் அறிவியல் வளர்ச்சி பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே உண்டாயிற்று. ராஜராஜன் என்ற படத்தில் பேய் பிடித்த பெண்ணுக்கு பேயை ஒட்டுவதற்காக எம்.ஜி.ஆர். உடுக்கடித்து பாடுவதாக ஒரு காட்சி அமைக்கப்பட்டது. அங்கு வந்த இளவரசி பத்மினியிடம் சாமியாடி தோற்றத்தில் இருக்கும் எம்.ஜி.ஆர். உடுக்கடித்த படி பத்மினியின் வாழ்வில் நடந்த விஷயங்களை எடுத்துக் கூறுவார். அதை அரசியார் [எஸ். டி. சுப்புலட்சுமி] வியந்து கேட்பார். இக்காட்சியில் எம்.ஜி.ஆர். சாமியாடியாக நடிக்கிறார் என்பது படம் பார்ப்பவர்களுக்குத் தெரியும் என்பதால் இதை அவர்கள் மூட நம்பிக்கை சார்ந்ததாகக் கொள்ளவில்லை. எம்.ஜி.ஆரின் செயல் திறனாகக் கருதி வியந்து ஏற்றுக்கொண்டனர்.



அறிவியலுக்குப் புறம்பான நகைச்சுவைக் காட்சிகள்

ராஜராஜன் படத்தில் மற்றொரு காட்சியில் எம்.ஜி.ஆர். தன்னை ஆவி என்று அறிமுகப்படுத்திக் கொண்டு இரவில் பத்மினியை அவரது அறையில் வந்து சந்திப்பார். அங்கிருந்த பழத்தட்டில் இருந்து ஒரு ஒரு பழத்தை எடுத்து அவர் சாப்பிட பத்மினி 'ஆவி பழம் தின்னுமா' என்று கேட்பார். இக்காட்சியில் அங்கு வந்தது ஆவி அல்ல; உண்மையான மனிதர் தான் என்பது இரசிகர்களுக்குத் தெரியும் என்பதால் இது மூட நம்பிக்கை சார்ந்த விஷயம் அல்ல என்பது தெளிவாயிற்று. இத்தகைய காட்சிகளை எம்.ஜி.ஆர். நகைச்சுவையாகப் பயன்படுத்தி இருப்பார்.

புதிய பூமி படத்தில் நாட்டு வைத்தியம் என்ற பேரில் மக்களை ஏமாற்றி வாழும் வைத்தியரின் செயல்களை நகைச்சுவையாகக் காட்டியிருப்பார். எம்.ஜி.ஆருக்காக ஜெயலலிதா நாட்டு வைத்தியரிடம் வாங்கிய கசப்பு மாத்திரைகளைக் கஷ்டப்பட்டு சாப்பிடுவார். அதைப் பார்த்த எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவின் சாப்பாட்டை அவருக்குப் பதிலாக





இவர் சாப்பிடப் போவார். பிறகு ஜெயலலிதா தனக்கு வயிறு பசிக்கிறது என்று கெஞ்சி வாங்கி சாப்பிடுவார். அப்போது ‘பசியும் நோயும் அப்படித்தான் அவரவருக்கு வந்தால் அவரவர் அனுபவிக்க வேண்டும்’ என்பதை எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவிடம் எடுத்துரைப்பார். அறிவியலுக்கு ஒவ்வாத பத்தாம்பசலித்தனமான செயல்களை நகைச்சுவை நடிகர்களைக் கொண்டு மக்களுக்கு எம்.ஜி.ஆர். புரியவைப்பார்.

நிறைவு

எம்.ஜி.ஆர். அறிவியலுக்கு உகந்தவற்றை தனது படங்களில் கதைக்களமாகவோ கருத்துக் காட்சிகளாகவோ அமைத்தார். மக்கள் தமது வாழ்க்கையில் பின்பற்ற வேண்டியவற்றை தனது கதாபாத்திரத்தின் வாயிலாகவும் பின்பற்றக் கூடாதவற்றை நகைச்சுவை நடிகர்கள் மற்றும் வில்லன் வில்லிகள் மூலமாகவும் தெரிவித்தார்.

7. சமூக விஞ்ஞானிக்குத் தூண்டுகோலாக விளங்கும் எம்.ஜி.ஆர். பாடங்கள்

எம்.ஜி.ஆரின் படங்கள் நல்ல பண்புகளையும் தனி மனித ஒழுக்கத்தையும் நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும் சமூக நீதியையும் படம் பார்ப்பவர்கள் மனதில் விதைத்தன என்பதில் ஐயமில்லை. அவரது அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்த படங்கள் படம் பார்த்தவரை அறிவியலில் ஆர்வத்தைத் தூண்டி விஞ்ஞானியாகச் செயல்பட வைத்தது மிகவும் பாராட்டுக்குரியாதாகும். சிறு வயது முதல் எம்.ஜி.ஆர். படம் பார்த்து வளர்ந்த ஒரு சிறுவன் பெரியவனாகி மெக்கானிக்கல் எஞ்சினியராக ஒரிசா மாநிலத்தில் பொறுப்பேற்றுப் பணி செய்து வரும் வேளையிலும் எம்.ஜி.ஆர். படங்கள் ஏற்படுத்திய தாக்கத்தினால் கடல் ஆராய்ச்சி, வானவியல் ஆராய்ச்சி, உலகத்தைச் சுற்றி பயணம் செய்யும் ஆவல் ஆகியவற்றால் உந்தப்பட்டு இன்று உலகம் போற்றும் ஓர் சமூக அறிவியலாளராக [SOCIAL SCIENTIST] உருவெடுத்துள்ளார். அவருக்குள் எம்.ஜி.ஆர். நாடி நரம்பெல்லாம் கனிந்திருக்கிறார்.

இன்று உலகம் முழுக்க பயணப்பட்டு தமிழரின் தடங்களை ஆராய்ந்து வரும் சமூகஅறிவியல் அறிஞரான ஒரிசா பாலு தனக்கு இப்பயணங்களுக்குத் தூண்டுகோலாக இருந்தது உலகம் சுற்றும் வாலிபன் என்கிறார். இவர் இருநூறு நாடுகளில் தமிழர்கள் அந்நாட்டுக் குடிமக்களாக் மாறி வாழ்வதைக் கண்டறிந்துள்ளார். அங்குத் தமிழரின் பண்பாட்டுக் கூறுகள் காணப்படுவதை ஆதாரத்துடன் விளக்குகிறார்.

பழங்காலத்தில் கடலில் தமிழர் கப்பல்களில் பயணம் செய்து வாணிகம் நடத்தியதற்கு மூல காரணம் ஆமைகளைப் பின்பற்றி அவை பயணப்படும் கடல் நீரோட்டத்தைப் அவர்கள் நாவாய் ஒட்டியது தான் என்பதைக் கண்டறிந்த ஒரிசா பாலு தன்னுடைய கடல் ஆய்வுக்கு தனக்கு தூண்டு கோலாக இருந்தது எம்.ஜி.ஆர். நடித்த ஆயிரத்தில் ஒருவன் படம் என்றார்.

தென்புலத்தார் என்ற பெயரில் படத் தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் அறிவியல் புனைவுப் படம் எடுக்கும் ஒரிசா பாலு தமிழகத்தின் ஆர்க்காட்டுப் பகுதியைப் பூர்விகமாகக் கொண்டவர். சென்னையில் படித்து வளர்ந்தவர். இவர் வெளிநாட்டுத் தீய சக்திகள் நம் நாட்டின் மீது ஏவி விடும் சுனாமியை பெரு மழையாக மாற்றும் அறிவியல் நுட்பம் சார்ந்த படம் ஒன்றை எடுத்து வருகிறார். இதில் வானவியல் மாற்றங்களால் ஏற்படும் தட்ப வெப்ப மாற்றங்களும் காட்டப்படுகின்றன. உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் வரும் எம்.ஜி.ஆரும் ஒரு காட்சியில் வருகின்றனர். வானவியல் ஆராய்ச்சியில் இவர்

ஈடுபடுவதற்கு எம்.ஜி.ஆர். நடித்த 'கலையரசி' தனக்கு 'இன்ஸ்பிரேஷனாக' இருந்தது என்றார். தனது வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் காலகட்டத்திலும் எம்.ஜி.ஆர். பாடல்களும் தன்னுடன் சேர்ந்து பயணிப்பதை எடுத்துரைத்தார்.



ஒரிசா பாலு அவர்களைப் பற்றி

பின் இணைப்பு

பெயர்: திரு ரா.சிவ பாலசுப்ரமணி ஆ நேர் ,

கல்வியும் பணியும்: இயற்பியலில் தேர்ச்சி பெற்று சுரங்கம் மற்றும் வெளி நாட்டுக் கருவிகளை பழுது வேலைகள் தொடர்பான பொறி இயல் துறையில் பல ஆண்டுகள் ஒரிசாவில் பணி காரணமாக ஆய்வுக்காக இந்தியா முழுவதும் சுற்றியவர். சென்னையில் தற்போது வசிப்பதால் பன்முக பல்துறை ஆய்வு நோக்கில் உலகை வலம் வருபவர்.

ஆற்றி வரும் பிற நற்பணிகள்

தன் பெயரோடு தன் ரத்த வகையை 15 ஆண்டுகளாக இணைத்து எழுதுவதோடு பொதுமக்களிடையே குருதிக்கொடை, தற்காப்பு உணர்வின வளர்க்கும் நோக்கில் இவ்வழக்கைக் கைக்கொள்ளத்தூண்டியும் வருகிறார்.

நீர் மேலாண்மை, காடுகள் மேலாண்மை, மரபு சார் அறிவியல், மருந்தியல் உழவில், மொழிகள், பண்பாடு ஒப்பிட்டுவியல் ஆய்வுகளில் ஆய்வு செய்வதோடு இளையோரையும் ஆர்வம் கொள்ளத் தூண்டுகிறார்.

தமிழர் தம் தொல்திறனான கடல்சார்ஆய்வுகள் இவரின் சிறப்பு. கடல் சார் இயற்கை வளங்கள், கடல் உயிரினங்களின் வாழ்வியல், கடல் நீரோட்டங்கள் தொல்லியல்

கடற்பயண வழிகள் கப்பற்கலை தொழிற்நுட்பம் போன்ற நுண்ணியல் வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்தியவர்.

புபனேஸ்வர் தமிழ் சங்கத்தின் தொடக்க உறுப்பினராக சேர்ந்து, பல பொறுப்புகளில் இருந்து 2002-2003 ஆண்டில் செயலர் ஆக பணியாற்றித் தமிழர்களை ஒரிசாவில் ஒருங்கிணைத்தவர். பின் அவர்களை ஏனைய உலகத் தமிழ் மக்களோடு ஒருங்கிணைத்தவர். மேலும் உலகத் தமிழ் அமைப்புகளை ஒன்று சேர்க்க ஆர்வம் காட்டி வருபவர் .

ஒரிசா கலிங்கத் தமிழ் தொடர்புகள் மற்றும் தமிழகத்தில் தமிழ் - கலிங்க தென் கோசல, ஒட்டர் தொடர்பான தமிழியல்ஆய்வுகள் தமிழர்களின் கடல் கடந்துஉலகம் பரந்த வணிகத்தொழில் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்தி தமிழர் பெருமையை நிலை நாட்டின.

ஒரிசா என்ற கிளைகளில் தமிழை தேடிய அவரின் நீண்ட நாள் தொழில் நுட்பம் மற்றும் மரபு சார்ந்த ஆய்வுப் பணிகளின் தொடர்பால்

குமரி கண்டம் மற்றும் லெமுரியா கடல் ஆய்வுகளில் ஈடுபட்டு இன்று மீன்கள் இனபெருக்கம் செய்யும் இடங்கள் கடலில் மக்கள் வாழ்ந்த நில பகுதிகள் என்றும் ஏற்றுமதி, நவீன கடல் சார் தொழில் நுட்பம் மற்றும் கடலியல் கள ஆய்வு செய்து லெமுரியா குமரிகண்டம் ,கடல் கொண்ட தென்னாடு தென் புலத்தார் போன்ற கருதுகோள்களை, தமிழ் இலக்கியம் கூறும்

கடல்கோள்கள் சான்றுகளோடு ஒப்பிட்டு பல ஆய்வியல் உண்மைகளை நிறுவி வருகிறார்.

கடலில் பன்முக நோக்கில் இயற்பியல் அறிவியல் நோக்கிலான ஆய்வுகள் பல மேற்கொண்டு அவற்றின் மூலம் வெளிப்படுத்தும் அடிப்படை உண்மைகள் நம் இந்தியாவின் தொல்வரலாற்றுச் சிறப்புக் கூறுகள் எனும் பெருமையுடையன.

இன பெருக்கத்திற்கு தமிழக ஒரிசா கடற்கரைக்கு வரும் கடல் ஆமைகள் தொடர்பான இனப்பெருக்க மையங்கள் பிற் காலத்தில் துறை முகமாய் வளர்ந்தது , ஆமைகள் நம் கடற்கரைகளைத் தேடி கடல் நீரோட்டத்தில் வரும் வழிகள், நம்முடைய கடலோடிகளால் பயன்படுத்தப்பட்ட உலகம் முழுவதும் வலம் வந்த ஆமைகளின் கடல்நீரோட்டப் பயணப்பாதை தொடர்ப்பான இனப்பெருக்க இடங்கள் 46000 க்கும் மேற்பட்டவை உலகின் பல நாடுகளில் தமிழ் பெயராலேயே விளங்குவதை பன்முக ஆய்வுகளின் மூலம் உறுதி செய்தவர்.

உலகில் ஆமைகளின் தங்கள் இனப் பெருக்கத்திற்காக உலகில் தேர்ந்தெடுத்துச்செல்லும் இடங்களில் கடலோடியத்தமிழர்கள் அங்குத் தங்கி தமிழ் மொழி மற்றும் பண்பாடுத்தடங்களுடன் இன்றும் இருப்பதை மெய்ப்பிக்க முயன்று வருகிறார்.

கடலோடிகளை மீனவர்களை வெறும் பாய் மரத்தில், மீன்பிடிப்பவர்களாக மட்டும் பார்க்காமல் கடல் சுற்று சூழல் அறிவு பெற்றவர்களாக

பார்ப்பவர், கடல் வள மேலாண்மையின் மூலம் உலக நடப்புகளை மீனவர்கள் ப்யன்கொண்டும் பயிற்சி பெற்றும் அல்லல் நீங்கி வாழ உதவி வருகிறார்.

புவியின் சுழற்சி, தீபகற்ப பகுதிகளில் தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்கள், அவர்கள் இயற்கை ஆற்றலின் பயன்பாட்டை உணர்ந்து விலங்குகளின் உணர்வுப் பட்டறிவு மூலமாக உலகியல் வாழ்வைத்தொடர்ந்து பின்கடற்பயணம் மூலமாக உலக நாடுகளில் பரந்து பிறருக்கும் அறிமுக படுத்தியவர்கள் என்னும் வரலாற்று உண்மை பற்றிய ஆய்வுத் தேடலில் உள்ளவர் .

தமிழர்களின் மரபு சார் மருத்துவம் பண்டைய அறிவியல் மற்றும் மருந்தியல் அறிவை மீட்டுருவாக்கம் செய்வதோடு மூலிகை விதைப் பண்ணைகள் அமைப்பதில் ஆர்வம் காட்டி வருபவர்.

தமிழர்களின் புவி சார் அறிவு கடல் சார் மரபு மற்றும் சுற்று சூழலை காக்க வேண்டு என்பதில் உறுதியாக இருந்து தமிழகம் முழவதும் காணொளி காட்சிகள் நடத்தி வருபவர், முக நூல் மற்றும் இணையம் மூலமாகவும் விழிப்புணர்வு செய்து வருகிறார். பல மாணவர்களின் கடல் சார் ஆய்வுகளுக்கு துணை புரிந்து வருகிறார்.

வரலாறு, சங்கத் தமிழ் இலக்கியம் என்பது வருங்கால சமூகத்திற்கு வழிகாட்டிகளாக இருக்கும் என்பது அவருடைய நம்பிக்கை.

இன்று காணும் பல சிக்கல்களை இயற்கைசார் வள மேலாண்மை ஆய்வுகளின் மூலம் தீர்த்தும்

வருகிறார். ஆயூஸ்பதி உலகளாவிய அமைப்பில் உலக தூதராக சித்த மருத்துவ மரபை பற்றி பேசி வருகிறார்.

தமிழர்கள் வாழும் நாடுகளில் தமிழ் இருக்கைகள் அமைத்து உலகெங்கும் தமிழியலுக்கு மதிப்பு கூட்ட சிந்தித்து வருபவர். உலக மக்களை ஒருங்கிணைக்க தென்புலத்தார், திறைமீளர், வான்மீகியார், ஆசிய தமிழர் கூட்டமைப்பு, உலகத் தமிழ் தொல்லியல் அமைப்பு, பெயருக்கு பின்னால் ரத்த வகை மற்றும் உலக தமிழ் பெண்களின் கூட்டமைப்புக்காக ஐயை என்ற உலகத்தமிழ் மகளிர் அமைப்பையும் நடத்தி வருகிறார் .

ஒருங்கிணைந்த பெருங்கடல் பண்பாட்டு ஆய்வு நடுவத்தை துவங்கி உலக மக்களுக்கு நம்முடைய தீபகற்ப கடல் சார் மேலாண்மை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த முனைந்துள்ளார்.

மரபு சார் அறிவியல் தொடர்பான ஆய்வு கூடத்தில் மாற்று உயிரி எரிபொருள் மற்றும் மரபு சார் மருந்தியல் ஆய்வுகள் சார்ந்த பணியில் இயக்குனராக இருந்து வருகிறார். இந்தியாவின் முதல் கடல் ஆய்வாக நீர் மூழ்கி கப்பலுக்கான திட்ட வரைவில் இயக்குனராக உள்ளார். உலக வணிக நிறுவனத்திலும் இயக்குனராகவும் இருக்கிறார்.

இதுவரை 1500 இடங்களுக்கு மேலாக பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவுகள் ஆற்றி இருக்கிறார். சேவை ஆய்வு எனத்தளராது தொடர்ந்து செயல்பட்டும் வருகிறார்.

புவிச் சுழற்சியின் மிக மையமான பகுதியில் கடல் சூழ்ந்து உள்ள தமிழர்களின் திரை மீளுதல், அதன் தொன்மைக்கு காரணமான மெய்யியலை நோக்கிய தேடலிலும் மீட்டுருவாக்கத்திலும் அவர் தம் ஆய்வினைத் தொடர்கிறார்.



முனைவர் செ.இராஜேஸ்வரி அவர்களின் நூல்கள்

